www.padippakam.com

# தமிழர் கண்ணோட்டம்

கோப்பு: 13
மடல் : 4
தி.பி. 2030 : மேழம்
கி.பி. 1999 : ஏப்ரல்
விலை ரூ. 5.00




படிப்பகம்

www.padippakam.com



# நிறை குறை

### போதிய திறனாய்வாக இல்லை

"சிவப்பாவுக்கு நேர்ந்த சிக்கல்" என்ற கட்டுரையில் இதர முக்கிய செய்திகளையும் சேர்த்து பரிசீலித்திருந்தால் சரியான முடிவுக்கு வந்திருக்க முடியும். இக்கட்டுரை சிவப்பாவின் வயது என்ற முக்கிய பிரச்சனையில் நழுவல் போக்கை கடைபிடிக்கிறது.

குற்றச் சாட்டிற்கு எழுத்து மூலமான விளக்கத்தை சிவப்பா அளித்திருந்த போதிலும் அவருக்கு சரியான சந்தர்பத்தை அளிக்கவில்லை என்று வாதிப்பது சரியில்லை. (சிவப்பாவின் விளக்கத்தின் மீது தேவையெனில் வினாக்களை எழுப்பி கூடுதல் விளக்கம் பெற முடியும்- இது குடியரசு தலைவரின் நடைமுறைகயை பொருத்தது) இது குறித்து உச்ச நீதி மன்ற நெறிமுறையின் வரையறுப்பினை குடியரசுத் தலைவர் எவ்வாறு மீறினார் என்று எடுத்துக் காட்டவில்லை. ஆனால் குற்றச் சாட்டிற்கான வினா எழுப்பப்படுகிறது.

திரு. தம்பித்துரை அமைச்சரகத்திற்கு வந்த கடிதத்தை சொந்த முறையில் வெளியிட்டதற்கு எவ்வாறு குடியரசுத் தலைவர் பொறுப்பேற்க முடியும்? பொறுப்புண்டு என்ற கருத்து சரியானதல்ல.

உயர் நீதி மன்ற தலைமை நீதிபதிக்கு தம்பிதுரை அனுப்பிய செய்தியை நீதிமன்ற, நிர்வாகம் ஏற்றுக் கொண்டு செயல்படுத்தியது. உச்ச நீதிமன்றம் வகுத்த வழிமுறைக்கு விரோதமானது என்றாலும் அதை பற்றிய விமர்சனம் இல்லை. உச்ச நீதிமன்றம் தலைமை நீதிபதி சிவப்பா வயது பற்றிய பிரச்சினையில் எடுத்த முடிவையே குடியரசு தலைவர் ஆதரித்து இறுதியாக்கியதை கட்டுரையில் குறிப்பிடவில்லை. நீதித்துறைக்கு அச்சுறுத்தல், ஆபத்து என்ற வகையில் எழுப்பப்படும் பிரச்சினையில் நீதித் துறையின் பங்கு பணியை உரியவாறு சொல்லியிருக்க வேண்டும். அதுவே பிரச்சினையை புரிந்து கொள்ள உதவி செய்யும்.

- இராஜிவிந்தன், திருத்துறைப்பூண்டி.

### தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம்

தமிழர் கண்ணோட்டம் (மார்ச் 1999) தலையங்கம் கண்ணோட்டம். இத்தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கும் புத்துலகப்படைப்பு இக் காலக் கட்டத்தில் இன்றியமையாத ஒன்று.

இந்தியா பல்வேறு மொழி, இன மக்கள் அடிப்படை கொண்டது. இதை உலக நாடுகளும் ஒப்புக் கொண்டு இந்தியாவை ஒரு உபகண்டமாகவே பார்ப்பதும் குறிப்பிடுவதும் அறிவோம். எனவே, இவ்வுப கண்டத்தின் மத்திய ஆட்சி முறை எல்லா மொழி, இன மக்களுக்கும் எல்லா நிலையிலும் சம உரிமை வழங்குவதாக இருக்க வேண்டும். இதற்கு, மத்தியில் இப்போதுள்ள இரு அவைகளுக்குப் பதிலாக மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, சம எண்ணிக்கையான பிரதிநிதிகளைக் கொண்ட ஒரே அவையிடம் மத்திய ஆட்சி இருக்க வேண்டியது இன்றியமையாத ஒன்று. இந்த மத்திய ஆட்சிப் பேரவை இந்திய மொழி வழி மாநிலங்களின் மத்திய ஆட்சி மன்றம் எனப் பெயர் பெறுவது முறையாகும்.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியோடு தமிழ்க அரசியல் கட்சிகளும், மற்ற சமூக அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு புதுயுகம் காண வேண்டும்.

- கவிஞர் துரை. சீ. தஞ்சை வளவன்

தமிழத் தேசியத் தோழர்களுக்கு எழுதப்பட்ட தமிழ்த் தேசியமும் தமிழ் ஈழமும் என்ற கட்டுரை வழிகாட்டும் தன்மையுடையது. அர்த்தமற்ற கைதட்டல்கள் ஆழமான ஈடுபாட்டைக் காட்டாது.

- வவுனியன், திருப்பூர்.

படிப்பகம்

www.padippakam.com

தமிழர் கண்ணோட்டம்

ஏப்ரல் 1999

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**பெ.மணியரசன்**
ஆசிரியர்
53 (அ) சமீன்தார் குடியிருப்பு
புது ஆற்றுச் சாலை,
தஞ்சாவூர் - 613 001
தொ.பே.: 32994

அச்சிட்டோர்:
நீட் பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 003.

வடிவமைப்பு:
காவிரி கணிப்பொறி அச்சு,
தஞ்சாவூர் - 613 001.

அட்டைப் படம்: பா. சர்மிளா மற்றும் ஜானகிராமன்

**தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம்**
**தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்**

# தில்லிச் சிக்கலுக்குத் தீர்வு என்ன?

நாடாளுமன்ற மக்களவை ஒரு சூதாட்டக் களம் என்பது மறுபடியும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. பச்சோந்தி அரசியலுக்குப் பழக்கப்பட்ட இடம்தான் அது. இருந்தாலும் இந்தத் தடவை, பச்சோந்தி கூட வெட்கப்படக் கூடிய. அளவுக்கு, வேகமாகத் தேர்தல் கட்சிகள் நிறம் மாற்றிக் கொண்டன.

ஜனநாயக மரம் விசித்திரமானது. அது நல்ல கனிகளையும் தருகிறது. நச்சுக் கனிகளையும் தருகிறது. இதுவும் இயற்கையில் உள்ள முரண்பாடுதான். ஆனால் இந்தியாவில் ஜனநாயக மரம் நச்சுக் கனிகளை மட்டுமே தரும் என்பது போல் நிகழ்வுகள் தொடர்கின்றன.

முதலாளிய நாடாளுமன்ற ஜனநாயகத்தில் நல்ல அம்சங்களே இல்லை என்பது நமது வாதமல்ல. இந்தியாவில் நாடாளுமன்றக் கட்சிகள் எல்லாமே 'சுப்பிரமணிய சாமியாய்' மாறி விட்டது தான் தீராத சோகம்.

மாபெரும் தலைவியாய் ஜெயலலிதா வடிவெடுத்ததுதான் தமிழ் நாட்டின் மிகப் பெரிய அரசியல் விபத்து. அதற்கான பின்னணியை அண்ணா, கருணாநிதி, எம்.ஜி.ஆர் ஆகிய தலைவர்களின் அரசியல் பின்புலத்தில் இருந்து ஆராய்ந்தால் தக்க விடை கிடைக்கலாம்.

மதவெறிப்பிடித்த பா.ஜ.க.வை தொடக் கூடாத கட்சியாக பார்க்கப்பட்ட மரபு தமிழர்களுக்கு இருந்து வந்தது. அந்த மரபை முறித்தவர் திராவிட இயக்கத்தின் புதிய பரிணாம வளர்ச்சியான ஜெயலலிதா அவர் பா.ஜ.க.வோடு கை கோத்து டெல்லி ஆட்சியைப் பிடிக்க அதற்கு உதவினார்.

ஜெயலலிதா எதிர்பார்த்தபடி அவரது சுய நலக் கோரிக்கைகளை பா.ஜ.க. அரசு முழு அளவில்



படிப்பகம்

www.padippakam.com

நிறைவேற்ற வில்லை. ஆனாலும் ஓர் அளவு நிறைவேற்றியது.

நடுவண் அரசுக்கான தமிழக வழக்கறிஞர்களை நியமிக்கும் பொறுப்பு ஜெயலலிதாவிடம் விடப்பட்டது. ஜெயலலிதா மற்றும் அவரது ஊழல் குழுவினரின் லஞ்ச வழக்குகளை தனி நீதிமன்றங்களில் இருந்து, ஜெயலலிதா விரும்பிய நீதிமன்றங்களுக்கு மாற்றியது. உயர்நீதிமன்ற நீதிபதிகளை இடம் மாற்றியது, போன்ற ஒழுக்கக் கேடான சலுகைகளை "உத்தமர்களின் பாசறையான" பா.ஜ.க. ஜெயலலிதாவுக்கு வழங்கியது. ஆனாலும் ஜெயலலிதாவுக்கு திருப்தி இல்லை. லஞ்ச ஊழல் வழக்குகள் மொத்தமாக இரத்தாகக் கூடிய வகையில் தி.மு.க. ஆட்சியைக் கலைப்பது, அன்னியச் செலவாணி ஊழலுக்காக ஜெ.ஜெ தொலைக்காட்சியை நிறுத்தியது போல சன் தொலைக்காட்சியை நிறுத்துவது உள்ளிட்ட ஜெயலலிதாவின் கோரிக்கைகளை பா.ஜ.க. அரசு ஏற்றுக் கொள்ள வில்லை.

இதனால் பொறுமை இழந்த ஜெயலலிதா பா.ஜ.க. ஆட்சியை கவிழ்த்துவிடும் முடிவுக்கு வந்தார். மாற்று அரசு அமைக்கக் கூடிய சக்திபற்றி கவலைப்படவில்லை காங்கிரஸ். பதவியில் இல்லாத மூன்று ஆண்டுகாலம் நீண்ட பெரும் இடைவெளியாக காங்கிரசுக்கு கனத்தது. ஜெயலலிதாவைப் பயன்படுத்தி பா.ஜ.க. அரசைத் தோற்கடித்தது.

மக்கள் சனநாயகப் புரட்சி நடத்தப் புறப்பட்ட மார்க்சிஸ்ட் கட்சி 'மாதா' புரட்சி செய்தாலே போதும் என்று முடிவுக்கு வந்து 'சோனியா' வை பிரதமராக்க கடந்த ஓராண்டாகவே தவம் இருந்தது. அது தன்னுடைய லட்சியமும் கை கூட இத் தருணத்தை பயன்படுத்திக் கொண்டது.

**ஆனால் மேற்கு வங்கத்திலும் கேரளத்திலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாதா கட்சியான காங்கிரஸ் தான் பிரதான எதிரி. மேற்கு வங்க, கேரள மக்களுக்கு தீங்கிழைக்கக் கூடிய காங்கிரஸ் கட்சி இந்திய மக்களுக்கு தீங்கு பயக்காது என்பது 'சுர்ஜித் - ஜோதிபாசு' இசம். இதன் பழைய பெயர். 'டாங்கேயிசம்'!**

பா.ஜ.க. அரசு கிறித்துவ சிறுபான்மை மக்களுக்குக் கொடுமைகள் இழைத்து, இந்து மதவெறிக்குத் துணை போவதைக் கண்டித்து தி.மு.க. ஒரு கோடி கையெழுத்து வாங்கியது. அம் மனுக்களில் இன்னும் 'மை' காயவில்லை. அதற்குள் பா.ஜ.க. அரசைப் பாதுகாக்க நேசக் கரம் நீட்டி முட்டுக் கொடுத்தது அக் கட்சி. இதுவும் திராவிட இயக்கத்தின் இன்னொரு பரிணாமமோ...?

சுர்ஜித்தும் கருணாநிதியும் அடிக்கும் சந்தர்ப்பவாத பல்டிகளுக்கு, அவர்கள் சந்தி சிரிக்கும் தத்துவ விளக்கங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஊழல் அபாயமானதா, வகுப்பு வாதம் அபாயமானதா என்று இவர்கள் கோட்பாட்டுப் பிரச்சனை பேசி சந்தர்ப்ப வாதத்திற்கு சித்தாந்த ஒப்பனை செய்து கொள்கிறார்கள். ஊழல், வகுப்பு வாதம் மட்டுமல்ல, இவர்களின் சந்தர்ப்ப வாதமும் அபாயமானதுதான். டாக்டர் இராமதாஸ் தில்லியில் பா.ஜ.க. வோடு கூட்டு, தமிழ்நாட்டில் அ.தி.மு.க. வோடு கூட்டு என்று பேசி ஐக்கிய முன்னணி தந்திரத்திற்கு புதிய இலக்கணமே வகுத்துக் கொண்டிருக்கிறார். வைகோவையும் கருணாநிதியையும் ஒரே அணியில் இணைத்து வைத்தப் பெருமை அண்ணாயிசத்துக்கு இல்லை. அத்வானி இசத்திற்கே உண்டு.

பீகாரில் லல்லு, உ.பியில் முலாயம் மற்றும் மாயாவதி ஆகியோரின் மாநில அரசியலில் பா.ஜ.க. முதன்மையான எதிரியாக இருப்பதால் இவர்கள் காங்கிரசோடு ஒருவகையான சந்தர்ப்பவாத இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். இம் மாநிலங்களில் இவர்களுக்கு எதிர் காலத்தில் காங்கிரஸ் பிரதான எதிரியாக வரக்கூடிய ஆபத்து நீங்காத நிலையில் இவர்கள் காங்கிரசோடு ஒட்டியும் ஒட்டாமலும் உறவு கொள்கிறார்கள்.

கருணாநிதி கூட மாநில அரசியலில் எதிரியாக உள்ள ஜெயலலிதாவுக்கு எதிர் முகாமில் இருப்பதே பாதுகாப்பானது என்று கருதுகிறார். கருப்பையா மூப்பனார் தமது மானசீக அனைத்திந்திய அரசியல் தலைவரான சோனியா காந்திக்கும் தமது தமிழகத் தேர்தல் கூட்டணி தலைவரான கருணாநிதிக்கும் இடையே திரிசங்கு சொர்க்கத்தில் அலைபாய்ந்து கொண்டு இருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

ஆந்திரப் பிரதேசத்தில் காங்கிரசை வெற்றி கொள்ள வேண்டுமானால் தில்லியில் காங்கிரசின் எதிரி ஆட்சியில் இருப்பதே பாதுகாப்பானது என சந்திரபாபு நாயுடு கருதி ஆட்சிக்கு வெளியே இருந்து கொண்டு பா.ஜ.க.வுக்கு ஆதரவளிக்கிறார்.

மேற்கண்ட கட்சிகளுக்கு அடைவதற்கு தனி இலக்கு எதுவுமில்லை, நாற்காலியைத் தவிர! இச் சந்தர்ப்பவாத அரசியலில் நின்று பார்த்தால் மாநில அரசியலில் வெற்றி பெற இந்த பல்டிகளைத் தவிர இவர்களுக்கு வேறு வழி இல்லை என்பதையும் கணக்கில் எடுக்க வேண்டும்.

இப்பொழுது சோனியா காந்தி ஒரு கால் தட்டுத் தடுமாறி ஆட்சி யமைத்தால் அதுவும் விரைவில் கவிழ்ந்து விடும். மறு தேர்தல் நடத்தினாலும் கிட்டத்தட்ட இப்பொழுதுள்ள நிலவரப்படிதான் கட்சிகளுக்கு இடம் கிடைக்கும். அறுதிப் பெரும்பான்மை காங்கிரசுக்கோ, பா.ஜ.க.வுக்கோ கிடைக்காது.

இவ்வாறாக அனைத்திந்திய கட்சி ஒன்றுக்கு அறுதிப் பெரும்பான்மை மக்களவையில் தொடர்ந்து கிடைக்காமல் போவதற்கான காரணம் என்ன? இதற்கான விடையில் தான் இந்தியாவின் தனித்தன்மை பொதிந்துள்ளது.

இந்தியா பல தேசங்களைக் கொண்ட துணைக் கண்டம். பல்வேறு மொழிகளும் பண்பாடுகளும் தனித்து வளர்ச்சியடைந்து நிற்கின்றன.

• **விடுதலைப் போராட்டக் காலத்திலும் அதை ஒட்டியும் எழுந்த அனைத்திந்திய அரசியல் தேவை முடிவுக்கு வந்து விட்டது.** உலகெங்கும் தேசிய இனங்கள் விழிப்புறும் காலமிது. அமெரிக்க ஏகாதிபத்தியம் கூட தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களின் ஊடாகப் புகுந்து கொண்டுதான் தனது ஆதிக்கப் போர்களை நிகழ்த்தவேண்டியுள்ளது (எ.டு) இராக்-குர்தீஸ், கொசாவா)

பகுஜன், சமாஜ்வாதி, ராஷ்ட்டிரிய ஜனதா, திரிணாமுல் காங்கிரஸ், இந்திய தேசிய லோக் தளம், லோக் சக்தி, போன்றவையெல்லாம் சாரத்தில் மாநிலக் கட்சிகளே. எனவே அனைத்திந்தியக் கட்சிகள் அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்கான வாய்ப்பு அருகிவிட்டது.

இந்த நெருக்கடியை சமாளிக்க அனைத்திந்திய அரசியல் பார்வை கொண்டோர் மாற்று ஆலோசனைகளை முன்வைக்கின்றனர். அவற்றுள் ஒன்று ஜனாதிபதி ஆட்சி முறை. பல்வேறு தேசிய இனங்களையும் வலுவான மாநிலக் கட்சிகளையும் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஜனாதிபதி ஆட்சி முறை பொருந்தக் கூடியது அல்ல. ஜனாதிபதி ஆட்சி முறை என்பது சாரத்தில் ஒற்றையாட்சியை பிரதிபலிப்பதாகவே அமையும். அமெரிக்கக் கூட்டாட்சி பெரும்பான்மையாக ஆங்கில மக்களைக் கொண்டதால், அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி முறை இருப்பதை இத்துடன் ஒப்பிட வேண்டியதில்லை. இந்தியாவுக்கோ உண்மையான கூட்டாட்சி முறை வரவேண்டும் என்பது பலரது கோரிக்கையாகவுள்ளது. சி. சுப்பிரமணியம் சொல்வது போல கட்சிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான சட்டம் இயற்றுவதும் ஜனநாயக மறுப்பில் போய் முடியும்.

பிரிந்து போகும் உரிமையுள்ள தன்னுரிமை தேசிய இனங்களுக்கு வேண்டும் என்று கூறுகிறது தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி.

இந்தியாவிலுள்ள தேசிய இனங்களின் பயணம் இனி இதனை நோக்கித்தான் இருக்கும்.

இந்து மதவெறி அரசியலும், அரசியல் ஊழலும், தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியப் போர்க்களத்தில் தான் எரிந்து சாம்பலாகும். எவர் ஒருவர் வாய் இந்திய தேசியம் பேசுகிறதோ அவர் கால் தெரிந்தோ தெரியாமலோ இந்து வகுப்பு வாதத்தில் பதிந்து இருக்கிறது. தற்போதுள்ள நாற்காலி சூதாட்ட அரசியல் நீடிக்கும் வரை அரசியலில் ஊழலை ஒழிக்க முடியாது.

தமிழ்த் தேசிய நெஞ்சங்கள் தில்லியில் நடக்கும் அரசியல் நில நடுக்கங்களைக் கண்டு பதட்டப்படாமல் தமிழ்நாட்டில் தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசியலை முதன்மைப்படுத்த வேண்டும். இதுவே வகுப்பு வாதத்திற்கும் ஊழலுக்கும் சாவு மணி அடிக்கும் ❖



படிப்பகம்

www.padippakam.com

# சாகும் வரை பட்டினிப் போராட்டம்
# மூன்றாவது மொழிப்போரின் தொடக்கமா?

-பெ. மணியரசன்

வருகின்ற 25.4.99 முற்பகல் சென்னை வள்ளுவர் கோட்டம் முன்பாக தமிழ் அறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் தலைமையில் தமிழண்ணல், சிற்பி, பாலசுப்பிரமனியம், இளங்குமரனார், இரா. இளவரசு, பெரும் புலவர் சிதம்பரம் த முருகேசன்,கி.த. பச்சையப்பன், இறைக் குருவனார், மா. இலெ, தங்கப்பா, சிந்தனையாளர் அர்த்தநாரி நா.ப. இராமசாமி, புதுவை, இரா. திருமுருகன், புலவர் தா. சுந்தர்ராஜன், குருவிக் கரம்பை வேலு, புலவர் அன்பு தங்கவல்லி போன்ற தமிழ் அறிஞர்களும், தமிழ் உணர்வாளர்களுமாக நூறு பேர் கோரிக்கை நிறை வேறும் வரை அல்லது சாகும் வரை பட்டினிப் போராட்டம் தொடங்குகிறார்கள்.

தமிழ்ச் சான்றோர் பேரவை 1998 அக்டோபர் 31, நவம்பர் 1, ஆகிய இரு நாட்களில் சென்னையில் நடத்திய தமிழகப் பெருவிழாவில், இரண்டாம் நாள் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி இப்பட்டினிப் போராட்டம் நடைபெறுகிறது.

## இப்போராட்டம் எதற்காக?

1. ஐந்தாவது வகுப்புவரை தமிழ் மட்டுமே பாட மொழி, பயிற்று மொழி! இப்பொழுது ஐந்தாம் வகுப் புவரை உள்ள ஆங்கிலத்தை நீக்கி விட வேண்டும். ஆறாம் வகுப்பிலிருந்து மொழிப் பாடமாக மட்டுமே ஆங்கிலம் இருக்க வேண்டும். பயிற்று மொழியாக அது இருக்கக் கூடாது.

2. மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புக ளில் வரும் கல்வியாண்டிலிருந்து தமிழ் வழி வகுப் புகளைத் தொடங்க வேண்டும்.

3. தமிழ் வழியில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

1938 ஆம் ஆண்டு தொடங்கிய மொழிப்போர் இன்னும் முடியவில்லை. கல்வித் துறையைப் பொருத்தவரை தமிழ் மொழிக்கு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

1938 இல் இராஜாஜி முதலமைச்சராக இருந்த போது இந்தியைத் திணித்தார். அந்த ஆதிக்க இந்தியை எதிர்த்து அப்போது போராட்டம் தொடங்கியது. தந்தை பெரியாரும் மறைமலையடிகளார், சோமசுந்தர பாரதியார் கி.ஆ. பெ. விசுவநாதம் போன்ற தமிழ் அறிஞர்களும் அன்று களத்தில் நின்றார்கள். அப்பொழுது கூட இன்றிருந்ததை விட மேலான நிலையிலேயே தமிழ் இருந்தது. எட்டாம் வகுப்பில் இருந்துதான் ஒரு மொழிப் பாடமாக ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்பட்டது.

பின்னர் ஆறாம் வகுப்பில் இருந்து ஒரு மொழிப்பாடமாக ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்பட்டது. இராஜாஜி காலத்தில் 8 ஆம் வகுப்பில் இருந்தும், காமராஜர் ஆட்சிக் காலத்தில் 6 ஆம் வகுப்பில் இருந்தும் ஆங்கிலம் மொழிப் பாடமாக மட்டும் இருந்தது. அக்காலத்தில் 11 ஆம் வகுப்புவரை இதர பாடங்கள் தமிழ் வழியில் மட்டுமே இருந்தன.

பக்தவத்சலம் ஆட்சிக் காலத்தில் உயர் நிலைப்பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு வகுப்பிற்கு ஒரு பிரிவு தொடங்கிக் கொள்ளலாம் என்று ஆணையிடப்பட்டது. பின்னர் மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் ஒரு மொழிப்பாடமாக கட்டாயம் ஆக்கப்பட்டது. கழக ஆட்சிகள் ஆங்கில வழிக் கல்விக்கு முதன்மை கொடுத்தன. இப்போக்கு மழலையர் கல்வியிலிருந்து ஆங்கிலமே என்ற நிலைக்கு இட்டுச் சென்று , அம்மா 'மம்மி' யான அலங்கோலம் நிகழ்ந்தது.

இந்த வரலாற்றைப் பார்த்தால் 5 ஆம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே மொழிப்பாடமாக, பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற நம்முடைய கோரிக்கை இராஜாஜி காலத்தில், காமராஜர் காலத்தில் நடைமுறையில் இருந்த கல்வித் திட்டத்தை கோருவதாகவே உள்ளது. 1938 இல் இருந்து 1965 வரை வீரம் செறிந்த மொழிப் போராட்டங்கள் நடந்தும் தமிழ் வழிக் கல்வியை பொருத்தவரை நாம் இராஜாஜி, காமராஜர் ஆட்சிக் காலங்களை விட மோசமாக பாதிக்கப்பட்டுள்ளோம் என்பதை எண்ணும் போது நெஞ்சு கனக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

1956 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் கல்வி அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம் கல்லூரிக் கல்வியில் தமிழ் பயிற்று மொழித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அப்போக்கு வளர்ச்சிப் பெற்று அனைத்துக் கல்வியும் தமிழ் வழியில் மாறுவதற்கு பதிலாக எதிர் திசைப் பயணம் நடந்து ஒன்றாம் வகுப்பு கூடத் தமிழ் வழியில் இல்லை ஆங்கிலத்தில் மட்டுமே என்ற விபரீதம் நேர்ந்தது.

1965 ல் நடந்த வரலாறு காணாத மொழிப் போர் எழுப்பிய காங்கிரஸ் எதிர்ப்பு அலையில் மிதந்து வந்து 1967 இல் தமிழக ஆட்சியில் அமர்ந்த தி.மு.க. அதிலிருந்து பிரிந்த அ.தி.மு.க. ஆகிய இரு கழகங்களின் ஆட்சியில் தான் இந்த அளவிற்கு தமிழுக்கு எதிரான ஆங்கிலத்தின் கொட்டம் அதிகரித்தது.

அன்னைத் தமிழை அரியணை ஏற்றுவோம் என்று சொன்னவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டு அரியணையை ஆங்கிலம் ஆக்கிரமித்துக் கொண்டது.

இதற்கான கோளாறு எங்கிருந்து தொடங்கியது? 1938 ஆம் ஆண்டிலிருந்து நடந்த மொழிப் போராட்டங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இப்போராட்டங்கள் சாரத்தில் தமிழ் மொழிப் பாதுகாப்பிற்கு நடத்தப்பட்டவைதான். ஆனால் முன்வைக்கப்பட்ட முழக்கம் 'இந்தி வேண்டாம்- ஆங்கிலம் வேண்டும்' என்பதாகவே அமைந்தது. 1965 இல் நடந்த மொழிப்போரில் மிக மோசமான முழக்கம் ஒன்று பிரபலப்படுத்தப்பட்டது. அது. **ஒரு போதும் இந்தி வேண்டாம் - எப்போதும் ஆங்கிலம் வேண்டும் (Never Hindi - Ever English) என்பதாகும்.**

தமிழின் பாத்திரம் என்ன என்பதை சமூக அறிவியல் பார்வை கொண்டு துல்லியப்படுத்தவில்லை. தகுந்த மொழிக் கொள்கை வகுக்கப்படாமலேயே தமிழுக்காக போராட்டங்களும் அளப்பரிய தியாகங்களும் நடந்தன.

மும்மொழிக் கொள்கை என்று காங்கிரஸ் சொன்னது. இரு மொழிக் கொள்கை என்று தி.மு.க. சொன்னது. இந்தி, ஆங்கிலம், தாய்மொழி மூன்றையும் படிக்க வேண்டும் என்பது மும் மொழிக் கொள்கை. ஆங்கிலம், தமிழ் இரண்டையும் படிக்க வேண்டும் என்பது இரு மொழிக் கொள்கை. **மும்மொழிக் காரர்கள் இந்தியும், ஆங்கிலமும் தமிழை அழிப்பதற்கான வழியைத் திறந்து வைத்தார்கள். இரு மொழிக் காரர்கள் ஆங்கிலம் தமிழை அழிப்பதற்கான பாதையை செப்பனிட்டார்கள்.**

இதற்கான காரணம் என்ன?

எப்பொழுதும் மொழிக் கொள்கையானது தேசிய இன வரையறுப்பில் இருந்தே பிறக்கும். தேசிய இனச் சிக்கலில் சரியான தீர்வு காணாதவர்கள் மொழிச் சிக்கலுக்கு தகுந்த விடையளிக்க முடியாது.

**மும் மொழிக் கொள்கையின் பிறப்பிடம் இந்தியா ஒரு தேசம் என்ற இயற்கைக்கு முரணான கருத்தாக்கமாகும். இரு மொழிக் கொள்கைக்கான பிறப்பிடம் திராவிட தேசம் என்ற தவறான கருத்தாக்கமாகும்.** இந்தியா பல தேசங்களை கொண்ட ஒரு துணைக் கண்ட நாடு என்ற உண்மையைப் பார்க்க மறுத்த காங்கிரசார், இந்தியாவிற்கு ஒரு பொது மொழியை உருவாக்கத் திட்டம் தீட்டினர். அந்த பொது மொழி 'இந்தி' என்ற முடிவுக்கு வந்தனர். இந்து மதத்தின் தத்துவ மொழியான சமஸ்கிருதத்தின் சாயல் கொண்டது இந்தி. இந்து மதவெறி கோலோச்சுகின்ற பசுமாட்டு வட்டாரமான (Cow Belt Area) உ.பி.,ம.பி., பீகார் மற்றும் அண்டை மாநிலங்களில் பேசப்படும் மொழி இந்தி. இந்திய தேசியத்தின் அடித்தளமாக விளங்கும் இந்து மதத்திற்கு நெருக்கமான மொழி இந்தி. எனவே இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி என்று காங்கிரசார் தேர்ந்தெடுத்தனர். ஆங்கிலேய முதலாளிகளுக்கு போட்டியாக வளர்ந்து வந்த இந்தியப் பெரு முதலாளிகளுக்கு, குறிப்பாக மார்வாரி, குஜராத்தி சேட்டுகளுக்கு இந்தியா முழுவதும் சென்று சுரண்ட உள்நாட்டுப் பொது மொழி ஒன்று தேவைப்பட்டது. இந்து மத வாதத்தை பயன்படுத்தி இந்திய தேசியத்தை கட்டியெழுப்ப உத்தி வகுத்த இப்பெரு முதலாளிகளுக்கு இந்தி மொழியே கைக்குக் கிடைத்த ஆயுதமாகியது. அதையே அவர்கள் பொது மொழியாக்க விரும்பினார்கள்.

இந்திய அதிகார வர்க்கத்தின் கருவாக விளங்கும் பார்ப்பனிய சக்திகள் தங்களுடைய வேத மொழிச் சாயலைக் கொண்ட இந்தியையே பொது மொழியாக்க விரும்பினர். இக்காரணங்களால் தான் காங்கிரஸ் கட்சியினாலும் மற்ற அனைத்திந்திய பெரு முதலாளியக் கட்சிகளாலும் இந்தி பொது மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி என்று கூறும் விதி 343 அரசு அமைப்புச் சட்டத்தில் ஏற்றப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

கொடுமை என்னவென்றால் பொதுவுடைமைக் கட்சிகளும் இந்தியை இந்தியாவின் ஆட்சிமொழியாக பொது மொழியாக ஏற்றுக் கொண்டதாகும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது திட்டத்தில் இந்தி தான் இந்தியாவின் ஆட்சி மொழி என்று குறிப்பிட்டுள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தியை வலியுறுத்தக் கூடாது என்றும், எதிர்காலத்தில் இந்திய மக்கள் தங்கள் விருப்பப்படி ஒரு பொது மொழியை உருவாக்கிக் கொள்வார்கள் என்றும் தன் கட்சித் திட்டத்தில் கூறுகிறது. இது மறைமுகமாக இந்தி பொது மொழியாகும் கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதாகும். இந்தியை வலியுறுத்தாமல் இயல்பாக அது பொது மொழியாகிட வாயப்புகளை உருவாக்கிட வேண்டும் என்ற உத்தி சார்ந்தது இக் கோட்பாடு. நேரு உறுதிமொழியின் இன்னொரு வடிவம் தவிர இது வேறல்ல.

காங்கிரசைப் போலவே பூர்வீக கம்யூனிஸ்ட் கட்சிகளும் இந்தியாவை ஒரு தேசம் என்று பார்த்தன. இந்தியாவுக்குள் தமிழ்த் தேசம், கன்னட, மலையாள, வங்காள, பஞ்சாபி, தெலுங்கு தேசம் என இருப்பதை பூர்வீக கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏற்கவில்லை. இவற்றை பிராந்தியம் என்ற அளவிலேயே பார்த்தன. இப்பார்வை தேசிய இனங்கள் பற்றிய மார்க்சிய - லெனினிய வரையறுப்புக்கு எதிரானவை.

இந்தியாவைப் போலவே பல்வேறு தேசிய இனங்களை, மொழிகளை கொண்டிருந்த சோவியத் ஒன்றியத்தை ஒரு தேசம் என்று அந்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சி குறிப்பிட வில்லை. தேசங்களின் ஒன்றியம் என்றே அதைக் குறிப்பிட்டார்கள். இங்கு தேசிய இனப் பகுதியை மாநிலம் என்று அரசியல் சட்டம் அழைக்கிறது. அங்கோ இறையாண்மையுள்ள குடியரசு என்று ஒரு தேசிய இனப் பகுதியை அழைத்தது அரமைப்புச் சட்டம். இந்த வரையறுப்பை பூர்வீக கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்தியாவுக்கு ஏன் பொறுத்திப் பார்க்கவில்லை? தத்துவத்தலைவராக லெனினையும் நடைமுறைத்தலைவராக நேருவையும் இக்கட்சிகள் ஏற்றுக் கொண்டனவா?

பூர்வீகக் கம்யூனிஸ்ட் கட்சிகள் தாய் மொழிக் கல்வியை எப்பொழுதும் வலியுறுத்துகின்றன.

தமிழ்நாட்டில் நாம் தமிழ் வழிக் க்ல்வி, தமிழ் வழி அர்ச்சனை என்று கோரும் போதெல்லாம் இடது சாரிக் கட்சிகள் அக் கோரிக்கைகளை ஆதரிக்கும். ஆனால் நமது கோரிக்கைக்கும் அவர்களின் ஆதரவுக்கும் இடையே நுணுக்கமான வேறுபாடு இருப்பதை உற்று நோக்கினால் புரியும். நாம் தமிழ் மொழியில் கேட்போம். அவர்கள் தாய்மொழியில் கேட்பார்கள்.

தாய்மொழி வழிக் கல்வி என்பது தமிழ் நாட்டில் வசிக்கும் தமிழர்கள், தெலுங்கு, உருது, இந்தி மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளைப் போசுவோர் அனைவருக்கும் அவரவர் தாய் மொழியில் கல்வி அளிப்பது என்ற பார்வையைக் கொண்டதாகும்.

தாய்மொழிக் கல்வி என்பது இந்த வகையில் ஒரு ஜனநாயகக் கோரிக்கை. மக்கள் மொழியில் அவர்களுக்கு கல்வியளிக்க வேண்டும் என்பதாகும். தமிழ் வழிக் கல்வி நாம் வலியுறுத்தும் போது அது ஒரு தேசிய இன உரிமையை குறிப்பதாக உள்ளது.

ஜனநாயக உரிமை என்ற மட்டத்தில் இடது சாரிகள் மொழிப் பிரச்சினையைப் பார்ப்பதால் அவர்கள் தமிழ் மொழிவழிக் கல்விக்கு உரிய அழுத்தம் கொடுக்காமல் பத்தோடு பதினொன்றாக நீர்த்துப் போன நிலையில் அதற்கு ஆதரவாக குரல் எழுப்புகிறார்கள். நேரடியாக தமிழ் வழிக் கல்வி என்று சொல்வது பிராந்திய வாதத்திற்கும் பிரிவினைவாதத்திற்கும் இட்டுச் செல்லும் என்று அஞ்சுகிறார்கள். அவர்கள் ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராய் வருகிறார்கள். ஆனால் இந்தி ஆதிக்கத்திற்கு துணை போகிறார்கள். காரணம் இந்திய ஆளும் வர்க்கம் முன் வைத்த இந்திய தேசியம் என்ற இட்டுக்கட்டப்பட்ட தேசிய வாதத்தை இடது சாரியினர் ஏற்றுக் கொண்டுள்ளதே ஆகும். இந்திய தேசியத்திற்கு பொது மொழியாக இந்தியை கருதுகிறார்கள்.

நாம், மொழிச் சிறுபான்மையினர் அவரவர் தாய் மொழியில் கற்பதை மறுக்கவில்லை. தமிழ் நாட்டில் வாழ்கின்ற யாராயிருந்தாலும் தமிழ் மொழியை ஒரு மொழிப்பாடமாக கட்டாயம் கற்க வேண்டும் என்பது நமது நிலைபாடு. மேலும் தமிழர் தாயகத்தின் ஆட்சி மொழியாய் கல்வி மொழியாய் தமிழே இருக்குவேண்டும். தமிழுக்கு நிகராக தமிழ் நாட்டிற்குள் வேறு எந்த மொழிக்கும் வாய்ப்பிருக்க முடியாது.

தேசம், தேசிய இனம், தேசிய இன மொழி ஆகியவற்றின் வரையறுப்புகளை புரிந்து கொண்டோர் தமிழ்த் தேசிய மொழியை முதன்மைப் படுத்துவார்கள். அதில் குழப்பம் கொண்டோர்தான்



படிப்பகம்

www.padippakam.com

தாய் மொழிக் கல்வி என்று பொத்தாம் பொதுவில் பேசுவர்.

**தாய் மொழிக் கல்வி என்பது ஜனநாயகக் கோரிக்கை. தமிழ் வழிக் கல்வி என்பது தேசிய இன அரசியல் கோரிக்கை.**

பொதுவாக, தாய்மொழிக் கல்வி என்று அவர்கள் கூறுவது லெனின் கோட்பாடான தேசிய இன தன்னுரிமையை மறுப்பதாகும். லெனின் வழியில் இந்திய இடதுசாரிகள் தன்னுரிமையை ஆதரித்து இருந்தால் இந்தியாவிற்கு ஒரு பொது மொழி தேவை என்று கூறியிருக்கமாட்டார்கள் 15 பெரிய மொழிகளும் நூற்றுக்கணக்கான சிறிய மொழிகளும் பேசப்பட்ட சோவியத் ஒன்றியத்திற்கு மக்களை இணைக்க ஒரு பொது மொழி தேவை என்ற கருத்து முன்வைக்கப் பட்டபோது லெனின் அதை எதிர்த்தார்.

### ஆங்கிலத்தை நீக்குவது தற்கொலைக்குச் சமம்

–ஆசிரியர் கி. வீரமணி

விடுதலை நாளேட்டின் ஞாயிறு மலரில் (11.4.99) ஆசிரியர் பதில் அளிக்கிறார். பகுதியில் வந்துள்ள கேள்வி–பதில்:

கேள்வி: இன்றைய கால கட்டத்தில்ஆங்கிலத்தை அறவே அகற்றுவது என்பது நமது வளர்ச்சியைத் தடுக்காதா?

–ஆரூர்ச் செல்வம், சென்னை.

பதில்: நிச்சயம் தடுக்கும், கண்ணைத் திறந்து கிணற்றில் குதித்து தற்கொலை செய்யும் நிலையே அது.

ஆங்கிலம் அந்நிய மொழி என்பதே அறிவுக் குறைவான வாதமாகும்! விஞ்ஞானத்தை அந்நியம் என்றா கூற முடியும்?

ஆங்கிலத்தை அறவே அகற்ற வேண்டும் என்று யார் கூறுகிறார்கள் என்பதை கேள்வியாளர் குறிப்பிடவில்லை. தமிழ்ச் சான்றோர் பேரவை த.தே.பொ.க. போன்ற அமைப்புகள், ஆறாம் வகுப்பிலிருந்து மொழிப்பாடம் என்ற அளவில் மட்டும் ஆங்கிலம் இருக்கட்டும் என்கின்றன. அது இருக்கட்டும்.

ஆசிரியர் வீரமணி அவர்கள் அளித்த பதில் அல்லவா தமிழ் மொழி மற்றும் இன உணர்வாளர்களின் நெஞ்சில் முள்ளாகக் குத்துகிறது.

உலகில் ஆங்கில வழிக் கல்வி இல்லாத ரஷ்யா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், சீனா போன்ற நாடுகளின் மக்கள் கண்ணைத் திறந்து கொண்டு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டு விட்டார்களா?

ஆங்கில மொழி இல்லாமலே உலக வணிக மையமாக 2000 ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகார் விளங்கியதே!

ஆங்கிலம் அந்நிய மொழி என்பதே அறிவுக் குறைவு என்கிறாரே ஆசிரியர்! ஆங்கிலம் தமிழர்களுக்குத் தாய் மொழியா? தமிழ்த் தேசிய இனம் என்று ஓர் இனம் இருப்பதையும் அதற்கொரு தாய் மொழி இருப்பதையும் ஏற்றுக் கொள்கிறாரா இல்லையா?

'தமிழா இன உணர்வு கொள்' என திராவிடர் கழகம் எழுப்பும் முழக்கத்தில், தமிழ் மொழிப் பாதுகாப்பிற்கான குரலும் இருக்கிறதா இல்லையா?

ஆங்கிலமே முழு முதல் விஞ்ஞானம் என்று சொல்லி விஞ்ஞானத்தை அந்நியம் என்று கூற முடியுமா என்று கேட்கிறார் ஆசிரியர்.

அடிக்கடி பெரியார் திடலில் ஆங்கிலத்தில் ஆவி எழுப்புதல் கூட்டம் நடத்துகிறார்களே, அயல்நாட்டுப் பிரச்சாரகர்கள் அதுவும் கூட விஞ்ஞானம் தானா?

பெட்ரண்ட் ரஸலும் இங்கர் சாலும் சாடிய ஆங்கிலேயர்களின் மூட நம்பிக்கைகளும் விஞ்ஞானம்தானா?

ஆங்கில மொழி ஆதிக்கம் அன்றாட வாழ்விலும், ஆட்சித் துறையிலும், கல்வியிலும் நம் தமிழ் மொழியை அழித்து வருவது தமிழர் தளபதிக்கு உறுத்தவில்லையா?

கல்வி நிறுவனங்கள் நடத்தும் தாளாளர் மட்டுமில்லையே அவர்!

பல்வேறு தேசிய இனங்கள் வாழ்கின்ற நாட்டில் எந்த ஒரு தேசிய இன மொழியையும் பொது மொழியாக்கக் கூடாது. அப்படி ஒன்றைப் பொது மொழியாக்கினால் இதர மொழிகள் மீது அது ஆதிக்கம் செலுத்தும். மேலும் பொது மொழி என்ற கோட்பாடே தவறானது. நாமெல்லாம் பொது மொழி என்று சிந்திப்பதற்கு முன்னாலேயே பல்வேறு இனமக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இடம் பெயர்ந்தும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்றார் லெனின்.

இந்தியாவில் கூட காலங்காலமாய் காசிக்கும், இராமேசுவரத்திற்கும், வெவ்வேறு மொழி பேசும் மக்கள் போய் வருகிறார்கள். கிரேக்கக் கப்பல்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் நங்கூரம் பாய்ச்சியதும், யவணர்கள் தமிழ் மண்ணில் வணிகம் செய்ததும், ரோமாபுரியில் தமிழ் மன்னர்களின் பொற்காசுகள் கண்டெடுக்கப்பட்டதும் பல்வேறு இனமக்கள் ஒரு பொது மொழி இல்லாமல் தொடர்பு கொண்ட வரலாற்றை சொல்லவில்லையா?



படிப்பகம்

www.padippakam.com

அடுத்து மக்கள் தொகையில் எத்தனை சதவீதம் பேர் வெளிநாடுகளுக்கோ அல்லது வெளி மாநிலங்களுக்கோ அடிக்கடி போய் வருகிறார்கள்? அப்படி போய் வருவோர் எண்ணிக்கை மிகக் குறைவாகும். தேவைப்படும் மக்கள் அயல்மொழியைக் கற்றுக் கொள்வதற்கு எந்தத் தடையும் இல்லை. நாம் கூட 6 ஆம் வகுப்பில் இருந்து ஆங்கிலத்தை ஒரு மொழிப்பாடமாக (Language) கற்றுக் கொள்ளலாம் என்கிறோம். எனவே ஒரு பொது மொழி வேண்டும் என்று கூறுவது அல்லது கட்டாயப்படுத்துவது ஜனநாயக விரோதமானது. தேசிய இன உரிமையை மறுப்பது. ஏதோ ஒரு ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்வதாகும்.

திராவிட இயக்கங்கள் தமிழர் இன உணர்வை தட்டி எழுப்பின என்றாலும் இல்லாத திராவிட தேசியத்தை முன்வைத்து தமிழர் எழுச்சியை திசை திருப்பிவிட்டன.

திராவிட இயக்க மூலவர்கள் தமிழக, தெலுங்கு, மலையாள பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இவர்களுக்கே ஒரு இணைப்பு மொழி தேவைப்பட்டது. அப்போதிருந்த சென்னை மாகாணத்தில் தமிழக, ஆந்திரபிரதேச, கேரள, கர்நாடகப் பகுதிகள் சேர்ந்திருந்தன. அன்றைய சென்னை மாகாண நிர்வாகத்திற்கும் இணைப்பு மொழியாகக் ஆங்கிலேய வெள்ளையர் அரசு ஆங்கிலத்தை வைத்திருந்தது. அப்பொழுது எழுந்த பார்ப்பனர் அல்லாத இயக்க, அதாவது திராவிட இயக்கத் தலைவர்கள் திராவிட தேசியம் பேசினார்கள். அப்போதிருந்த தலைவர்கள் தொலை நோக்கோடு தமிழ்த் தேசியத்தைத்தான் முன் வைத்திருக்க வேண்டும். 1938 ல் எழுந்த இந்தி எதிர்ப்புப் போரில் - தமிழ் நாடு தமிழருக்கே என்ற சரியான முழக்கத்தை தந்தை பெரியார் முன் வைத்தார். ஆனால் பின்னர் திராவிட தேசியமே அழுத்தம் பெற்றது.

ஆந்திரப் பிரதேசம் விசால ஆந்திராவுக்கும், கேரளம் ஐக்கிய கேரளத்திற்கும் குரல் கொடுத்த போது தமிழ்நாடு திராவிடத்திற்குக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தது. தமிழ் நாட்டைச் சேர்ந்த திராவிட இயக்கத் தலைவர்களுக்கு தேசிய இனப் பார்வையில் அப்பொழுது ஏற்பட்ட ஊனம் இன்னும் குணமாகவில்லை.

திராவிடம் என்பது ஒரு மொழிக் குடும்பத்தை - மரபு இனத்தை மட்டுமே குறிக்கும் அது தேசிய இனத்தை குறிக்காது. மரபு இனம் (Race) என்பது வேறு; தேசிய இனம் (Nationality ) என்பது வேறு. திராவிடம் என்பது இப்பொழு நடை முறையில் இல்லை. தமிழ்த் தேசியம் மட்டுமே உள்ளது.

**இல்லாத இந்திய தேசியத்தை ஏற்று இடது சாரிகள் மொழிப் பிரச்சினையை குழப்பினர்; இந்தியை ஆதரித்தனர். செல்லாத திராவிட தேசியத்தை ஏற்று திராவிட இயக்கத்தினர் மொழிப்பிரச்சினையைக் குழப்பினர்; ஆங்கிலத்தை ஆதரித்தனர்.**

பெரியாரை தமிழ்த் தேசியத்தின் தந்தை என்று ஏற்றுக் கொண்டவர்கள் நாம். தமிழ்நாடு தமிழருக்கே என்று குரல் கொடுத்தவர் அவர். முதல் இந்தி எதிர்ப்புப் போரின் தலைவர். திருக்குறள் மாநாடு நடத்தித் தமிழகமெங்கும் திருக்குறளைப் பரப்பியவர். ஆனால் அவருக்கு இருந்த மொழிக் கொள்கை குறைபாடு உடையது. ஆங்கிலம் அறிவியல் மொழி என்றும், பகுத்தறிவு மொழி என்றும் கருதினார். கல்வி மொழியாக மட்டுமின்றி வீட்டு மொழியாகவும் ஆங்கிலம் வரவேண்டும் என்று எழுதினார்; பேசினார். தமிழ் பக்தி மொழி, மூட நம்பிக்கைகளுக்கான மொழி என்ற முடிவுக்கு வந்தார். இந்த கருத்தின் அடிப்படையில் தமிழ் காட்டுமிராண்டி மொழி என்றும் அவர் சாடினார். ஆங்கிலம் படித்தால் பகுத்தறிவு வளரும் என்று கருதினார். குழந்தைக்கு தாய்ப்பால் போன்றது தமிழ்; புட்டிப்பால் போன்றது ஆங்கிலம். ஆகவே தமிழ் வழியில் தான் கல்வி தரவேண்டும் என்று தமிழ் அறிஞர்கள் கூறியபோது அவர்களை தமிழ்பால் பைத்தியங்கள் என்று பெரியார் விமர்சித்தார். குழந்தை, தாய்ப்பால் மட்டுமே குடித்தால் வளர்ந்து விடுமா? செயற்கை உணவு வேண்டாமா என்று கேட்டார்.

இவை எல்லாம் தந்தை பெரியாரின் தவறான மொழிப் பார்வையாகும். தமிழை நசுக்க வேண்டும் என்ற தீய நோக்கம் அவருக்கு இல்லை. தமிழர்களை பகுத்தறிவு வாதிகளாக, முன்னேறியவர்களாக ஆக்க வேண்டும் என்ற ஆசையில் அவர் முன் வைத்த தவறான கருத்துகள் இவை.

வளர்ச்சியடைந்த மொழிகளில் எதையும் பகுத்தறிவு மொழி என்றோ மூட நம்பிக்கை மொழி என்றோ வகைப்பிரிப்பது மொழியியல் வரையரைக்கு



படிப்பகம்

www.padippakam.com

முரணானது. வளர்ச்சியடைந்த மொழிகளில் பகுத்தறிவு, மூடநம்பிக்கை, அறிவியல் கருத்துகள் கலந்தே இருக்கும். ஆங்கிலேயர்களுக்குள்ள மூடநம்பிக்கைகளை "நான் ஏன் கிறித்தவன் இல்லை" என்ற நூலில் பெட்ரண்ட் ரசல் விளாக்கிறார். ஆங்கிலேயர்களுக்குள்ள மூடநம்பிக்கைகளை இங்கர் சாலும் அம்பலப்படுத்தினார்.

மொழியைப்பற்றி ஸ்டாலின் குறிப்பிடும்போது அதற்கு வர்க்கச் சார்பு கிடையாது, எல்லா வர்க்கங்களுக்கும் பொதுவானது. அதே போல் சமூகக் கட்டுமானத்தின் அடித்தளத்தை சார்ந்தது என்றோ மேல் கட்டுமானத்தை சேர்ந்தது என்றோ மொழியைப் பிரிக்கமுடியாது. இரண்டுக்கும் பொதுவானது என்றார்.

இதே போல் தான் பகுத்தறிவு மொழி என்றோ மூடநம்பிக்கை மொழி என்றோ விஞ்ஞான மொழி என்றோ, அஞ்ஞான மொழி என்றோ எதுவும் கிடையாது. பழங்குடி மக்கள் மொழி வளர்ச்சியடையாத மொழி. காரணம் அம்மக்களின் சமூக நிலையும் வளரவில்லை. தமிழ் மொழி பழங்குடி மக்களின் மொழி போன்ற வளர்ச்சியடையாத மொழியல்ல. தமிழ் ஒரு செம்மொழி. (Classical Language)

ஆத்ம சரீர சுகம் அளிக்கும் ஆவி எழுப்புதல் கூட்டம் அடிக்கடி சென்னை பெரியார் திடலில் நடைபெறுகிறது. அக்கூட்டங்களில் பேசுவோர் ஆங்கிலேயர்களாகவும் இதர ஐரோப்பி நாடுகளைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பதை நாம் இன்றும் பார்க்கலாம்.

ஆங்கிலம் மட்டுமே அறிவியல் மொழி இல்லை. ரஷ்யன், ஃபிரெஞ்ச், ஜெர்மனி, ஜப்பான் சீனம், போன்ற மொழிகளும் அறிவியல் மொழிகளே. தமிழும் அறிவியல் மொழியே! அமெரிக்கர்களுக்கு நிகராக ரஷ்யர்களும், விண்வெளி விஞ்ஞானத்தில் முன்னேறி உள்ளனர். மேற்கண்ட மொழி பேசும் நாடுகளில் தங்கள் தங்கள் தாய்மொழியிலேயே அறிவியலைக் கற்கிறார்கள். விஞ்ஞானிகள் அனைவரும் ஆங்கிலேயர்கள் என்பது போன்ற தவறான பார்வையும் பலருக்கு உள்ளது. விஞ்ஞானிகள் அவரவர் தாய்மொழியில் கண்டு பிடிப்புகளை எழுதுகிறார்கள். ஆங்கிலேயர்கள் அவற்றை உடனுக்குடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொள்கிறார்கள். தமிழிலும் அவ்வாறு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை உடனுக்குடன் மொழி பெயர்த்துக் கொள்ள வேண்டும். வானவியல் ஆராய்ச்சியின் தந்தையான கோப்பர் நிக்கஸ் போலந்துக்காரர். இவர் தமது கண்டுபிடிப்புகளை போலந்து மொழியில் எழுதினார். De Revolutionibus Orbium Coelestium என்று அந்நூலுக்கு பெயர். முதன் முதலாக தொலைநோக்கியை உருவாக்கிய கலிலியோ அது குறித்த ஆய்வுகளை தமது தாய்மொழியான இத்தாலியில் எழுதினார். ஆர்க்கிமிடிஸ் கிரேக்க மொழியில் தமது கண்டுபிடிப்பை எழுதினார். இப்படி ஏராளமாகச் சொல்லலாம்.

தாய் மொழியில் கற்கும் பொழுதுதான் சுய சிந்தனை வளரும். புதி கண்டுபிடிப்புகளை உருவாக்க முடியும்.

காந்தி சொல்கிறார்.

அன்னிய மொழி, பயிற்சி மொழியாக இருப்பதனால் நமது குழந்தைகளின் மூளை வளர்ச்சி தடைப்படுகிறது. அது நரம்புத் தளர்ச்சியை உண்டாக்குகிறது. நெட்டுருப்போட்டு ஒப்பிப்பதற்கும், சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாக மாற்றுவதற்கும், அந்நிய பயிற்சி மொழி காரணமாகிறது. சுய சிந்தனையை அழித்து விடுகிறது. பெற்ற அறிவைக் குடும்பத்துக்குள்ளோ மக்களிடையேயோ பரப்புவதற்குத் தடையாக இருக்கிறது.

-காந்தி 1928

உலகம் முழுவதும் உள்ள கல்வி உளவியல் அறிஞர்கள் தாய்மொழிக் கல்வியே மாணவர்களின் திறமையை வளர்க்கும் என்று ஒருமித்துக் கூறுகிறார்கள்.

மருத்துவம், பொறியியல் படிப்புகளை தமிழ் வழியில் கற்றுத் தருவதற்குரிய பாட நூல்களை தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் தயாரித்து வைத்துள்ளது. தமிழ் வழியில் சொல்லித்தர ஆசிரியர்கள் தயாராக உள்ளார்கள். தமிழ் வழியில் படிக்க மாணவர்களும் தயாராக உள்ளார்கள். அரசுதான் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய மறுக்கிறது.

அனைத்திந்திய தொழில் நுட்ப கல்விக் கழகம் (AICTE) கடந்த ஆண்டு தமிழ் வழியில் பொறியியல் படிக்க அனுமதி அளிக்கவில்லை என்ற ஒரு காரணத்தைத் தமிழக அரசு கூறுகின்றது. இதை தமிழ் வழிக் கல்வியை மறுப்பதற்கான ஒரு சாக்காகத் தமிழக அரசு சொல்லிக் கொண்டிருக்கிறது.

உரியவாறு வாதாடி அல்லது போராடி தமிழ் வழியில் பொறியியலைக் கொண்டு வந்திருக்க முடியும். மிஞ்சிப் போனால் பல்கலைக் கழக மானியக்



படிப்பகம்

www.padippakam.com

குழு அளிக்கும் நிதி உதவி தமிழ் வழிப் பொறியியலுக்கு கிடைக்காமல் போகலாம். தமிழுக்காக தமிழக அரசே அத்தொகையை வழங்கியிருக்கலாம்.

ஆங்கில வழியில் பயின்றால் உலகம் முழுவதும் வேலை கிடைக்கும் என்று கூறி கானல் நீர் கனவுகளை வளர்க்கிறார்கள். தமிழ்நாட்டில் ஆங்கில வழியில் படித்தவர்கள் எத்தனை பேர் வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போயிருக்கிறார்கள்? மக்கள் தொகையில் மிகக் குறைவானவர்களே வெளிநாடுகளுக்குப் போகிறார்கள். அதிலும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற ஆங்கிலம் பேசும் நாடுகள் மிகச் சிலவே. அரபு நாடுகளுக்கு வேலைக்குப் போகும நபாகளின் எண்ணிக்கைதான் ஆங்கில நாடுகளுக்கு வேலைக்குப் போனவர்களின் எண்ணிக்கையை விட அதிகம், அரபு நாடுகளுக்கு வேலைக்குப் போக ஆங்கிலம் தேவையில்லை. அரபிக் கற்றுக் கொண்டும் போவதில்லை. தமிழ் நாட்டில் தொழில் வணிகத்தைப் பற்றி கோலோச்சும் மார்வாரி, குஜராத்தி சேட்டுகள் வரும் பொழுதே தமிழ்க் கற்றுக் கொண்டு வருவதில்லை.

ஒரு நாடு வெளிநாடுகளில் வேலை தேடுவதை அடிப்படைத் திட்டமாக வைத்து தனது கல்விக் கொள்கையையோ பொருளாதாரக் கொள்கையையோ வகுத்தால் அந்நாடு முன்னேற்றத்தின் முதல் படியில் கூட ஏற முடியாது. தனது நாட்டுக்குள்ளேயே தனது மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தருவதுதான் சரியான கொள்கையாக இருக்க முடியும்.

எந்த மொழியும் வேலை வாய்ப்பை தராது. ஒரு நாட்டின் தொழில், வேளாண், வணிகம், விநியோகம் போன்ற துறைகளில் ஏற்படும் வளர்ச்சியும், சமூக அமைப்பும் சமதர்ம நோக்கமுள்ள அரசுமே வேலை வாய்ப்பை உருவாக்கித்தரமுடியும். தமிழ்வழிக் கல்விக்கு எதிரான கருத்துக்கள் மேற்கண்டவாறு எழுப்பட்ட போதிலும் 25.4.99 இல் தொடங்க இருக்கும் பட்டினிப் போராட்டத்திற்குத் தமிழகமெங்கும் ஆதரவு பெருக்கெடுப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது. தமிழுக்கு ஆதரவான இந்த எழுச்சியைக் கண்டு பலர் பலவாறு பேசுகிறார்கள்.

துக்ளக் இதழில் துர்வாசர் இந்த எழுச்சியை கண்டு மிரண்டு மடைமாற்றும் வாதம் செய்கிறார். பள்ளிக் கூடங்களுக்கு கூரை இல்லை. கரும்பலகை இல்லை, இதுப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் தமிழ் வழிக் கல்வி பற்றி பேசலாமா என்று கேட்கிறார். பள்ளிக் கூடங்களுக்கு கூரையும், கரும்பலகையும் வேண்டாம் என்று தமிழ் வழிக் கல்வி கூறுகிறதா? கூரையும் கரும்பலகையும் இல்லாமல் ஆங்கில வழிக் கல்வி தொடர்ந்தால் பரவாயில்லையா?

கல்கி இதழோ, தொடக்கக் கல்வி தமிழில் இருக்கலாம். உயர்கல்வி ஆங்கிலத்தில் தான் இருக்க வேண்டும் என்று கூறிவிட்டு கும்மிடிப்பூண்டிக்கு வடக்கே போனால் தமிழ்ப் பருப்பு வேகாது என்று ஏகடியம் செய்துள்ளது. கும்மிடிப்பூண்டிக்கு வடக்கே உள்ள ஆந்திர கிராம மக்களிடம் ஆங்கிலப் பருப்பு மட்டும் வேகுமா? டெல்லியிலேயே ஆங்கிலத்தில் கேட்டால் இந்தியில்தான் பதில் சொல்கிறார்கள். தமிழில் இசை வேண்டும் என்று கேட்டால் இசைக்கு மொழி கிடையாது என்பார்கள். தமிழ் வழியில் அர்ச்சனை கேட்டால் பக்திக்கு மொழி கிடையாது என்பார்கள். ஆனால் இவர்கள் ஒவ்வொன்றிலும் தமிழுக்கு எதிராக ஒரு அயல் மொழியை நிறுத்துகிறார்கள்.

தமிழ்ச் சான்றோர் பேரவை தொடங்கிய சாகும் வரையிலான பட்டினிப் போராட்டத்திட்டத்தை முதலில் ஆதரித்த மார்க்சிட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இப்போது தனது ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளது. இப்போராட்டத்தின் ஊடாக தனித் தமிழ்நாடு பிரச்சாரம் நடைபெறுவதாக த.மு.எ.ச குற்றம் சாட்டி தனது விலகலுக்குக் காரணம் கூறுகிறது. த.மு.எ.ச. தாய்மொழிக் கல்வியை ஆதரிக்கிறது. நாம் தமிழ் வழிக் கல்வி என்றாலே அதில் பிரிவினை நோக்கம் இருப்பதாக குற்றம் சாட்டுகிறது. ஆட்சியாளர்கள் கூட சொல்லாத குற்றச் சாட்டை அது சொல்கிறது. அவர்களின் இந்திய தேசிய தமிழ்த் தேசியத்தை காவு கேட்கிறது.

இவைகள் ஒரு புறம் இருக்கட்டும். அதோ மக்களைப் பாருங்கள்! அவர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள். கடந்த கால சாதனைகளிலிருந்து வீரம் பெறுவோம். கடந்த கால தவறுகளிலிருந்து பாடம் பெறுவோம்.

இப்பொழுது தொடங்கும் மொழிப்போர் எந்த அயல் மொழிக்கும் ஆதரவாக அல்ல. தமிழுக்காகவே தமிழர்களுக்காகவே. இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலாவது ஆங்கில ஆதிக்கத்திலிருந்து தமிழ் மொழிக்கு விடுதலை கிடைக்கட்டும்.

மும் மொழிக் கொள்கை மோசடிக் கொள்கை!

இரு மொழிக் கொள்கை ஏமாற்றுக் கொள்கை!!

ஒரு மொழிக் கொள்கையே உரிமைக் கொள்கை!!!



படிப்பகம்

www.padippakam.com

# விடுதலை அடையப் போகும் கிழக்கு தி மோர்

- கி. வெங்கட்ராமன்

இந்தோனேசிய ஆதிக்கத்துக்கு எதிராக கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாக எந்த நாட்டு உதவியும் இன்றி தன்னந்தனியாகப் போராடி வந்த கிழக்கு தி மோர் (East Timor) இன்று விடுதலை அடையும் தருவாயில் உள்ளது.

இந்தோனேசியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் உள்ளது தி மோர் தீவு. இத்தீவின் கிழக்குப் பகுதியே கிழக்கு தி மோர் தேசம். 14,874 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள இந்நாட்டின் மக்கள் தொகை 30 லட்சம். இதில் 78% மக்கள் திமோரியர்கள்.

திமோரியர்கள் ஒரே தாய்மொழியை கொண்டவர்களல்லர். வெவ்வேறு மொழி பேசும் 12 இனத்தவர்களை 'தேதும்' என்ற மொழி பொது மொழியாக நின்று இணைக்கிறது. தேதும் மொழியை 60% மக்கள் பேசுகின்றனர். திமோரியர்களை ஒன்றிணைக்கின்ற முக்கிய காரணியாக ரோமன் கத்தோலிக்க கிருத்துவ மதம் விளங்குகிறது. திமோரியர்கள் அனைவருமே கத்தோலிக்கர்கள்.

இந்தோனேசியாவின் 20 கோடி மக்கள் தொகையில் மிகப் பெரும்பாலோர் இஸ்லாமியர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

சந்தன மர வளம் மிக்க கிழக்கு திமோரை போர்த்துகீசியர்கள் கைப்பற்றி 400 ஆண்டுகளாக தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தனர். ஆயினும் போர்ச்சுக்கல் ஏகாதிபத்தியத்தின் ஆப்பிரிக்க காலனி நாடுகளான மொசாம்பிக், அங்கோலா ஆகிய நாடுகளில் 1960 க்குப் பிறகு விடுதலைப் போராட்டங்கள் தீவிர மடைந்தன. இப்பகுதிகளில் தனது படைகளைக் குவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் போர்ச்சுக்கல்லுக்கு ஏற்பட்டது. இதனால் கிழக்குத் திமோரில் போர்ச்சுக்கல்லின் ஆதிக்கப்பிடி தளரத் தொடங்கியது. 1970- களில் ஆப்பிரிக்க காலனி நாடுகளை போர்ச்சுகல் இழந்த போது அந்நாடு பெரும் இழப்புகளைச் சந்தித்து, இராணுவ வல்லரசாக நீடிக்க முடியாமல் போனது.

இந்நிலையில் 1975, நவம்பர் 28-ஆம் தேதியன்று, எந்தவித முன்னறிவிப்பும் இன்றி போர்ச்சுக்கல் ஏகாதிபத்தியம் கிழக்கு திமோரை விட்டு 'சொல்லாமல் கொள்ளாமல்' வெளியேறியது.

ஏற்கெனவே போர்ச்சுக்கல் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து திமோரியர்கள் அவ்வப்போது தீவிரப் போராட்டங்களை நடத்தி வந்தனர் என்றாலும் போர்ச்சுக்கல்லின் திடீர் வெளியேற்றம் அவர்களை திக்குமுக்காட வைத்து விட்டது.

அவசர அவசரமாக நவம்பர் 29 அன்று 'கிழக்கு திமோர் ஜனநாயகக் குடியரசு' என்று தமது விடுதலையை பிரகடனம் செய்தனர் திமோரியர்கள். ஆயினும், திமோரிய விடுதலைக்காகப் போராடிய பல்வேறு அமைப்புகளுக்கு இடையே முறையான ஒருங்கிணைப்பு இல்லாததால், உள்நாட்டு மோதல் ஏற்பட்டது.

இந்த உள்நாட்டு மோதலைச் சாக்காக வைத்து இந்தோனேசிய அதிபர் சுகார்டோ தமது படைகளை அனுப்பி கிழக்குத் திமோரை ஆக்கிரமித்தார். பத்தே நாட்கள் சுதந்திர நாடாக இருந்த கிழக்கு திமோர் 1975 டிசம்பர் 7-ஆம் தேதி மீண்டு அடிமை நாடாக மாறியது. இனி கிழக்கு திமோர் இந்தோனேசியாவின் ஒரு மாநிலம் என்று சுகார்டோ அறிவித்தார்.

இந்தோனேசிய அரசின் அப்பட்டமான இந்த ஆக்கிரமிப்பை ஐ.நா. கண்டித்தது. பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் ஒப்புக்காகக் கண்டித்தன. ஏனெனில் சுகார்டோ ஆட்சியை ஊட்டி வளர்த்ததே அமெரிக்க வல்லரசுதான். 1956 -ல் இந்தோனசியாவின் குடியரசுத் தலைவராக இருந்த சுகர்னோவின் ஆட்சியைக் கவிழ்த்து, அரசைக் கைப்பற்றி, சுகர்னோவுக்கு அரசைக் இருந்த இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்து, பல்லாயிரக் கணக்கான கம்யூனிஸ்ட்டுகளைக் கொன்று குவித்தார் சுகார்டோ.



படிப்பகம்

www.padippakam.com

தமது கம்யூனிச எதிர்ப்பு நடவடிக்கைகளின் முகவராக சுகார்டோவை அமெரிக்கா பயன்படுத்தியது. எனவே, கிழக்கு திமோர் நாட்டை சுகார்டோ கைப்பற்றிய போது அமெரிக்கா பாராமுகமாக இருந்தது.

ஒரு புறம் இராணுவ ஒடுக்குமுறையின் வழியாகவும், இன்னொரு புறம் இந்தோனேசியர்களைக் கட்டாயமாகக் குடியேற்றுவதன் மூலமும் கிழக்கு திமோரை தொடர்ந்து தம் கைப்பிடிக்குள் வைத்திருக்க சுகார்டோ முயன்றார். விடுதலைக்குப் போராடி வரும் திமோரியர்கள் சுமார் 20,000 பேர் சுகார்டோ இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 1975 ல் கிழக்கு திமோரின் மக்கள் தொகை 6,80,000 ஆக இருந்த போது திமோரியர்கள் இம்மக்கள் தொகையில் 97% அளவுக்கு இருந்தனர். இந்தோனேசியர்கள் ஒரு விழுக்காடு கூட இல்லை. ஆனால் இன்று கிழக்கு திமோரின் மக்கள் தொகை 8,00,000 ஆக உள்ளபோது திமோரியர்கள் 78% ஆகக் குறைந்து, இந்தோனேசியர்கள் 20% ஆக உள்ளனர். கட்டாயக் குடியேற்றத்தின் மூலம் இந்தோனேசியர்கள் தொகை இந்நாட்டில் இவ்வளவு உயர்ந்துள்ளது.

இது தவிர சுமார் ஒரு இலட்சம் இந்தோனேசிய படையாட்கள் கிழக்குத் திமோரில் நிலை கொண்டுள்ளனர். கிழக்கு திமோரில் உள்ள இந்தோனேசியர்கள் மத்தியில் ஆயுதக் குழுக்களை உருவாக்கி விடுதலைக்குப் போராடும் திமோரியர்கள் மீது ஏவி வருகிறது இந்தோனேசிய இராணுவம். இந்த ஏப்ரல் முதல் வாரத்தில் மட்டும் 13 திமோரியர்கள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தைப் பொருளாதாரத்தின் சிறந்த எடுத்துக்காட்டு என்று அமெரிக்க ஆட்சியாளர்களால் வர்ணிக்கப்பட்ட இந்தோனேசியப் பொருளாதாரம் 1997 - ஆம் ஆண்டில் சரியத் தொடங்கியது. 'ருபியா' என்ற இந்தோனேசிய நாணய மதிப்பு 70% வீழ்ந்தது. வங்கிகள் திவாலாயின; ஆலைகள் மூடப்பட்டன. விலைவாசி தாறுமாறாக உயர்ந்தது.

கொதிப்படைந்த இந்தோனேசிய மாணவர்கள் தீவிரக் கிளர்ச்சியில் இறங்கினர். தலைநகர் ஜகார்த்தாவின் தெருக்களில் இராணுவம் - மாணவர் மோதல் பல மாதங்கள் தொடர்ந்தது. இராணுவ அடக்குமுறை வீழ்ந்தது. சுகார்டோ தூக்கியெறியப்பட்டார். ஹபீபி இந்தோனேசியாவின் புதிய குடியரசுத் தலைவர் ஆனார்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இந்தோனேசியாவுக்கு கிழக்கு திமோரில் தொடர்ந்து இராணுவத்தை நிறுத்து வைப்பது பெரும் சிக்கலாக உள்ளது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு கிழக்குத் திமோர் விடுதலைப் படையினர் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர். கிழக்குத் திமோர் விடுதலை இயக்கத்தின் தலைவர் ஜனானா குஸ்மோ(Xanana Gusmao) நீண்ட காலமாக வீட்டுக் காவலில் இருந்து கொண்டே இந்த விடுதலைப் போராட்டத்தை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

"செருப்புக் காலுக்குள் கல் சிக்கிக் கொண்டு உறுத்துவது போல கிழக்கு திமோர் உறுத்துகிறது" என்றார் இந்தோனேசிய அதிபர் ஹபீபி. கிழக்கு திமோரின் தன்னுரிமையை ஏற்று அங்கு ஐ.நா. மேற்பார்வையில் கருத்துக் கணிப்பு (Opinion Survey) நடத்த ஹபீபி இணங்கியுள்ளார்.

திமோரிய மக்களிடம் ஐ.நா. மேற்பார்வையில் நேரடியாக 'கருத்து வாக்கெடுப்பு'(Plebicite) நடத்த வேண்டும் என்று விடுதலை இயக்கத் தலைவர் ஜனானா குஸ்மோ் வலியுறுத்தி வருகிறார். அதற்குமுன் கிழக்குத் திமோரிலிருந்து இந்தோனேசிய இராணுவம் வெளியேற வேண்டும். இந்தோனேசிய ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைய ஐ.நா. அமைதிக் காவலர்களை (Peace Keeping Police) அனுப்ப வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

ஜூலையில் கருத்துக் கணிப்பு அல்லது கருத்து வாக்கெடுப்பு நடத்தப்படும். இந்தோனேசியாவுக்குள் சுயாட்சியா, இந்தோனேசியாவிலிருந்து சுதந்திரமா என்று கிழக்கு திமோர் மக்கள் முடிவு செய்வார்கள்.

கருத்தறியும் நடவடிக்கை நேர்மையாக நடந்தால் கிழக்கு திமோர் மக்களில் மிகப் பெரும்பாலோர் சுதந்திரம் பெறவே வாக்களிப்பார்கள்.

இந்த நூற்றாண்டின் இறுதியில் கிழக்கு திமோர் தனது ஐந்து நூற்றாண்டுகால அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறப்போகிறது.

திமோரிய மக்களுக்கு நமது வாழ்த்துக்கள்!



படிப்பகம்

www.padippakam.com

# அயர்லாந்து விடுதலைப் போராட்டம்-7

- எஸ்.வி. ராஜ துரை

நவீன தேசம் என்பது பூர்ஷ்வா வர்க்கம் ஒரு மேலாண்மை செலுத்தக் கூடிய வர்க்கமாக வளர்ச்சி பெறுகிற ஒரு கால கட்டத்தில், அதாவது முதலாளித்துவ உற்பத்தி முறை திரட்சி பெறுகிற கால கட்டத்தில் தோன்றுகிறது என்று மார்க்சும் ஏங்கல்சும் கருதுவதால் அவர்களைப் பொறுத்தவரை நவீன தேசங்கள் என்பன. பூர்ஷ்வா வர்க்கங்களின் 'உணர்ச்சியின் துணை விளைவுகளே' தவிர வேறல்ல. எனவே நவீன தேசங்களை பூர்ஷ்வா வர்க்கத்தின் சிறப்பியல்களைக் கொண்டே மதிப்பிட முடியும். தேசியப் போராட்டமோ, கிளர்ச்சியோ, உற்பத்தி சக்தியின் வளர்ச்சியில் மேலும் ஒரு 'உயர்ந்த' கட்டத்திற்கு இட்டுச் செல்லுமானால் அதற்கு ஆதரவு தரப்பட வேண்டும். ஆனால், தேசிய இயக்கங்கள், வரலாறற்ற மக்களிடையே தோன்றுமானால், அதாவது விவசாயி - நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பை அடிப்படையாகக் கொண்ட தேசிய சமுதாயங்களிடையே தோன்றுமானால்; அவை, உலகுதழுவிய வகையில் முதலாளித்துவம் வளர்ச்சியடைவதால் ஏற்படுகிற பெரும் மாறுதல்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் மறைந்தொழியவே செய்யும். உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி, முதலாளித்துவ உற்பத்தி முறை, பூர்ஷ்வா வர்க்கத்தின் மேலாண்மை ஆகியவற்றின் துணை விளைவாக தேசிய சமுதாயங்களின் வளர்ச்சியைப் பார்க்கும் இப்பார்வையே தேசிய (இன) பிரச்சனை பற்றிய மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரின் கருத்துகளையும் நிலைப்பாடுகளையும் வடிவமைத்து வந்தன எனலாம்.

**இதன் காரணமாக தேசியக் கிளர்ச்சிகளின் இனத்துவ (ethnic) பண்பாட்டுப் பரிமாணங்களை அவர்கள் மிக மிகக் குறைத்து மதிப்பிட்டனர். தேசியக் கருத்தியல்கள் என்பன அவர்களைப் பொறுத்தவரை தேசங்களின் வளர்ச்சியின்போது ஏற்படும் வெறும் துணைவிளைவுகளாகும். இத்தகைய பார்வை, ஒரு தேச அரசை உருவாக்குவதற்கு பூர்ஷ்வா வர்க்கத்திற்குள்ள தேவையை மிகையாகவும் இனத்துவ, பண்பாட்டுப் பரிமாணத்தை மிகக்** குறைவாகவும் மதிப்பிடுகிறது. தேசிய (இன) பிரச்சனையைப் பொறுத்தவரை, மார்க்சும், ஏங்கல்சும் கொண்டிருந்த பார்வை நாம் ஏற்கனவே கூறியதுபோல மேற்கு ஐரோப்பிய முன்மாதிரிகளிலிருந்து பிறந்ததாகும். முதலாளித்துவ வளர்ச்சி மீது தரப்படும் அழுத்தங்களும் அப்பார்வையில் உள்ளன. தேசிய இயக்கங்களும் தேசிய சமூகங்களும் முதலாளித்துவ அமைப்பில் எத்தகைய இடத்தைப் பெற்றிருந்தனவோ அதன் அடிப்படையிலேயே வரையறை செய்யப்பட்டன; மதிப்பிடப்பட்டன.

மேலும் உயர்ந்ததொரு வளர்ச்சிக் கட்டத்தை வளர்த்தெடுப்பதற்கு பூர்ஷ்வா வர்க்கத்திற்கு உதவும் பொருட்டு ஒரு தேச அரசின் உருவாக்கத்திற்கு, சில தேசங்களின் வளர்ச்சி காரணமாக உள்ளது. தேச அரசுகளை உருவாக்க இயலாத தேசிய சமூகங்கள் 'வரலாற்று அலைக்கு' எதிராகச் செயல்படுவதாக மார்க்சும், ஏங்கல்சும் கருதினர். அத்தகைய தேசிய சமூகங்கள் செயல்பாட்டளவில் பிற்போக்குத் தனமானவை. ஏனெனில் அவற்றால் ஒரு வலுவான பூர்ஷ்வா வர்க்கத்தை உருவாக்க முடியாது. அவை உள்ளார்ந்த பிற்போக்குத்தன்மை கொண்டவையுமாகும். ஏனெனில் அவை நவீனத்துவத்தை எதிர்க்கின்றன. ஒரு முதலாளித்துவச் சூழலில் அவை தொடர்ந்து நிலவுவது சமுதாய முன்னேற்றத்திற்கு இடையூராக உள்ளது. எனவே அவை தம்மைவிடக் கூடுதலான ஜீவசக்தியுள்ள அண்டைத் தேசங்களில் கரைந்து விட வேண்டும். ஆனால் இந்த சமூகங்கள், தேசியப் புத்துயிர்ப்பை வலியுறுத்திக் கொண்டே இருக்குமானால் அவை சமூக ரீதியில் பிற்போக்கானவையாக அமையும். ஏனெனில் அவற்றால் முதலாளித்துவ நிலைமைகளில் நீடித்து வாழ இயலாது. அவை நிலப்பிரபுத்துவ அமைப்புக்கே பின்னோக்கிச் செல்லும். இந்த நிலப்பிரபுத்துவப் பகுதிகளுக்கோ, பூர்ஷ்வா வர்க்கத்தின் முற்போக்கான, ஐக்கியப்படுத்தும் பாத்திரத்தை எதிர்க்கின்ற பிற்போக்குச் சக்திகளுடன் இணைந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.[82]



படிப்பகம்

www.padippakam.com

## மணமகள் தேவை

சென்னையில் அரசுப்பணி, மாத ஊதியம் ரூ. 7000/– அகவை 33, தோற்றப் பொலிவுள்ள மணமகனுக்கு, 30 வயதிற்குட்பட்ட, நல்ல தமிழ்க குடும்பத்தைச் சார்ந்த, முற்போக்குச் சிந்தனையுள்ள வேலைக்குப் போகும் அல்லது வேலைக்கு செல்லத் தகுதியுள்ள படித்த மணப்பெண் தேவை. சாதி தடையில்லை. வரதட்சிணை இல்லை.

தொடர்பிற்கு...

சா. பேகன்
63, தியாகி இராமசாமி தெரு
குடந்தை–1
தொலை பேசி – 433537


தமிழ்த் தேசிய மாத இதழ்

தமிழர் கண்ணோட்டம்

சந்தா செலுத்தி விட்டீர்களா?

ஆண்டுக் கட்டணம் ரூ.60/–
வாழ்நாள் கட்டணம் ரூ.600/–
தனி இதழ் ரூ.5/–

வரைவோலை காசோலை
அனுப்புவோர் தமிழர் கண்ணோட்டம்
என்ற பெயரில் அனுப்பவும்
53 (அ) சமீன்தார் குடியிருப்பு
புதுஆற்றுச் சாலை
தஞ்சாவூர் – 613 001


### தமிழ் வழிக் கல்வி, தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கோரி மார்ச் 23–ல் அடையாளப் பட்டினிப் போராட்டம்

**தஞ்சாவூர்**

தஞ்சைத் தொடர்வண்டி நிலையம் அருகில் நடைபெற்ற பட்டினிப் போராட்டத்திற்கு புலவர் பண்டரி நாதன் தலைமை தாங்கினார். தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் அறிவியல் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் இராம. சுந்தரம் பட்டினிப் போராட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி பேரா.விருத்தாச்சலம், பேரா. ப. அருளி, முனைவர் இறையரசன், நா. வைகறை (த.இ.மு) ம. செந்தமிழன் (த.மா.மு), பழ. இராசேந்திரன் (த.தே.பொ.க.) உட்பட பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்களும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களும் உரையாற்றினர்.

தோழர் சி. மகேந்திரன் (சி.பி.ஐ.) பட்டினிப் போரை முடித்து வைத்து உரையாற்றினார்.

**பட்டுக்கோட்டை**

தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பில் பட்டுக்கோட்டையில் பட்டினிப் போராட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திரு. இராம. இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற பட்டினிப் போராட்டத்தை மருத்துவர் செல்லப்பன் தொடங்கி வைத்தார். போராட்டத்தை விளக்கி புலவர் சா. பன்னீர் செல்வம், உஞ்சை ராசன், வழக்குரைஞர் பிரகாசம் புலவர் தங்க. அன்புவள்ளி நா. வைகறை(த.இ.மு) இராம கிருட்டினன் உட்பட பலர் உரையாற்றினார். பேரா. பெரியார்தாசன் முடித்து வைத்து சிறப்புரையாற்றினார்.



படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய தேசிய சமுதாயங்களை 'வரலாறு இல்லாத தேசங்கள்' ( non - historical nations) என்று அவர்கள் அழைத்தனர். இது ஹெகலிடமிருந்து எடுத்துக கொள்ளப்பட்ட கருத்தாக்கமாகும். காலப்போக்கில் தமக்கென தேச அரசுகளை உருவாக்கிக் கொள்ள முடியாமல் போன தேசிய (இனங்களால்) சமூகங்களால், எதிர் காலத்திலும் அவற்றை உருவாக்கிக் கொள்ள முடியாது என்பதே அக்கருத்தாக்கத்தின் முக்கியமான அம்சங்களிலொன்றாகும். மார்க்சைப் போலன்றி, ஹெகல் 'தேசம்' 'அரசு' ஆகியவற்றைக் கூர்மையாக வேறுபடுத்திப் பார்த்தார். ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் ஒரு தேசிய சமூகமாக இருக்கலாம். ஆனால் அந்த நிலையில் இருந்து கொண்டு உலக வரலாற்றின் வளர்ச்சிக்கு அவர்களால் பங்களிப்புச் செய்ய இயலாது. ஒரு தேசத்தால் ஒரு அரசை உருவாக்கிக் கொள்ள இயலும் போதுதான் அதனால் தனது வரலாற்றுப் பாத்திரத்தை நிறைவு செய்ய முடியும். தமக்கென ஒரு அரசை உருவாக்கிக் கொள்ள இயலாமல் போன நாகரிகமடையாத மக்களுக்கு வரலாறு இல்லை.

ஹெகலியக் கருத்து முதல்வாதப் பரிணாமக் கோட்பாட்டின்படி, தொடக்க நிலையிலுள்ள அல்லது வளர்ச்சி குன்றிய நாகரிகங்கள் மேலும் வளர்ச்சியடைந்த சமூக அமைப்பு வடிவங்களுக்கு வழிவிட்டாக வேண்டும். இந்த வளர்ச்சியடைந்த நாகரிகங்கள்(சமூக அமைப்புகள்) ஒரு மேன்மையான அரசு உருவாக்கத்தில் போய் முடியும். சுதந்திரத்தின் உருத் தோற்றமே அரசு. அரசு என்பது சம்பந்தப்பட்ட மக்களின் ஆன்மீக மதிப்பீடுகளின் வெளிப்பாடு ஆகும். தங்களுக்கென ஒரு அரசை உருவாக்க இயலாதவர்களாகப் போய்விட்ட மக்களால் இனி ஒரு போதும் அதனை உருவாக்க இயலாது. அவர்கள் வரலாற்று வெள்ளத்தில் அழிந்தே தீர வேண்டும்.

'தேசம்' 'அரசு' ஆகியவற்றைக் கூர்மையாக வேறுபடுத்திப் பார்த்த ஹெகல், ஒரு அரசைத் தாங்கி நிற்கும் அடித்தளம் 'தேசம்' ஆகும் என்றும் உறவுமுறைகளும் மொழியும் ஒரு தேசத்தைப் பிணைக்கின்றன என்றும் கூறினார். 'அரசு' அக்குறிப்பிட்ட மக்களின் ஆன்மாவிலிருந்து பெறப்படுகின்ற அறவியல் இலட்சியங்களிலிருந்து உருவாகின்றது. அம்மக்களின் 'சமூக ஆன்மா' ஒரு புறவடிவம் எய்தி அரசையும் அதன் நிறுவனங்களையும் உருவாக்குகிறது. எனினும் சம்பந்தப்பட்ட ஒரு மக்களின் (தேசிய இனத்தின்) 'சமூக ஆன்மா' சுதந்திரத்தின் வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யும் போது தான் இது சாத்தியம். ('சுதந்திரம்' என்பது ஹெகலைப் பொருத்தவரை, உலக ஆன்மா அல்லது முழுமுதல் கருத்து என்பது காலம், வெளி ஆகியவற்றில் வெளிப்பட்டு தன்னைத் தானே அறிந்து கொள்கிற நிகழ்வுப் போக்காகும்). ஒரு தேச அரசை உருவாக்க இயலாத சமூகங்கள் உலக ஆன்மாவை ஏற்றிச் செல்பவர்களில் அவர்கள் இனி வரலாற்றால் பொருட்படுத்தப்படமாட்டார்கள். அநாகரிக தேசங்களின் உரிமைகள் நாகரிக தேசங்களின் உரிமைகளுக்கு நிகராக இருக்க முடியாது.

ஹெகலின் அரசியல் தத்துவத்திலுள்ள மிக பலகீனமான அம்சம் என்று விமர்சன அறிஞர்களால் கருதப்படும் இத்தகைய விளக்கம் பொருள் முதல்வாதத்திற்கு நேர் எதிரானது என்பதைச் சொல்லத் தேவையில்லை. எனினும் 'வரலாறுடைய தேசம்', 'வரலாறு இல்லாத தேசம்' என்ற ஹெகலியத் திணைகள், 1848 -49 ஆம் ஆண்டுகளில் நடந்த ஐரோப்பியப் புரட்சி, அப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் கடைப்பிடிக்க வேண்டிய உத்திகள் ஆகியனபற்றி மார்க்ஸ், ஏங்கல்ஸ் கூறிய கருத்துகளில் - குறிப்பாக ஏங்கல்சின் கருத்துகளில் விமர்சனமின்றிப் பயன்படுத்தப்பட்டன. (மார்க்ஸ், 'புரட்சிகர தேசங்கள்' 'புரட்சித் தன்மையற்ற தேசங்கள்' எனப் பாகுபாடு செய்தார்.) ஒரு தேசத்திற்கு வரலாறு உள்ளதா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு ஹெகல் பயன்படுத்திய 'தேச சமூகத்தின் ஆன்மா' என்ற அளவு கோலுக்குப் பதிலாக 'முதலாளித்துவ உற்பத்தி முறைக்குள் நுழைவதற்கு ஒரு தேசத்திற்குள்ள ஆற்றல்' என்ற அளவுகோல் பயன்படுத்தப்பட்டது.

## ஏங்கல்ஸ் எழுதினார்:

பின்னாளில் வரலாற்று வளர்ச்சியில் முதன்மையான வாகனமாக அமைந்த தேசத்தால் அடக்கியொடுக்கப்பட்ட ஒரு முன்னாள் மக்களின் எச்சத்தை, ஏதோவொரு அல்லது பல மக்கள்களின் சிதறல்களை ஏதோ ஒரு மூலையில் கொண்டிராத நாடு ஐரோப்பாவில் ஏதும் இல்லை. ஹெகல் கூறுவது போல வரலாற்றின் போக்கின் கீழ் ஈவிரக்கமின்றி நசுக்கப்பட்ட ஒரு தேசத்தின் இந்த நினைவுச் சின்னங்கள், மிச்சம் மீதியுள்ள மக்கள்களின் சிதறல்கள் எப்போதுமே எதிர்ப்புரட்சிப் பதாகையை வெறியோடு



படிப்பகம்

www.padippakam.com

தூக்கிப் பிடிப்பவர்களாக மாறுகின்றனர். அவர்கள் முழுமையாக அழிக்கப்படும் வரையிலோ அல்லது அவர்கள் தம் தேசியப் பண்பை இழக்கும் வரையிலோ அப்படித்தான் இருப்பர். பொதுவாக அவர்கள் இருப்பதே ஒரு பெரும் வரலாற்று ரீதியான புரட்சிக்கு எதிராக உள்ள எதிர்ப்பாக இருப்பது போலத்தான்.

"ஸ்காட்லாந்தில் இத்தகையவராக இருப்போர், 1640 முதல் 1745 வரை ஸ்டூவர்ட் வம்ச மன்னர்களை ஆதரித்து வந்த கெயெல்கள் (**Gaels**). பிரான்சில் இத்தகையவராக இருப்பவர்கள் பூர்போன் வம்ச மன்னர்களை 1742 முதல் 1800 வரை ஆதரித்துவந்த பிரெட்டோன்கள் (**Bretons**). ஸ்பெயினில் இத்தகையவராக இருப்பவர்கள், டான் கார்லோஸ் மன்னனை ஆதரித்துவந்த பாஸ்க்குகள்(**Basques**).

"ஆஸ்திரியாவில் இத்தகையவர்களாக இருப்பவர்கள் அனைத்து ஸ்லாவிய இயக்கத்தை ஆதரிக்கும் தென் ஸ்லாவியர்கள். அவர்கள், மக்கள்களில் மிச்சம் மீதியுள்ள சிதறல்களைத் தவிர வேறல்லர். மிகவும் குழப்பமான ஆயிரமாண்டுக் கால வரலாற்றின் விளைவே தவிர வேறல்ல. மிச்சம் மீதியாக உள்ள இந்தச் சிதறலும் கூட மிகவும் குழம்பிப் போயுள்ளது. தனது விமோச்சனம் ஐரோப்பிய இயக்கம் முழுதும் தலை கீழாகத் திருப்படுவதிலேயே பொதிந்துள்ளது என்று கருதுகிறது. அதனுடைய பார்வையின்படி அந்த இயக்கம், மேற்கிலிருந்து கிழக்காக அல்ல, மாறாக கிழக்கிலிருந்த மேற்காகச் செல்ல வேண்டும்..."[83]

உலகெங்கும் நடக்க வேண்டிய புரட்சிக்கான முன்மாதிரியே பிரெஞ்சுப்புரட்சி என்று மார்க்சும் ஏங்கல்சும் கருதியதால் தேசிய பிரச்சனை குறித்த அவர்களது பகுப்பாய்வுக்கான கோட்பாட்டு அடிப்படையாக அப்புரட்சியே அமைந்தது. (அது மட்டுமின்றி பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான முன்மாதிரியாக 1789 முதல் 1848 வரை பிரான்சில் நடந்த பல்வேறு புரட்சிகளும் அவர்களது பகுப்பாய்வில் இடம் பெற்றன). அதாவது பூர்ஷ்வாப்புரட்சியானது, சிறிய தேசிய சமூகங்களை, மேலதிக வளர்ச்சியடைந்த தேசிய சமூகங்களில் ஒன்றிணைத்துக் கொள்வதன் மூலம், அவற்றின் தனித்தன்மைகளை அழிப்பதுடன் நிலப்பிரபுத்துவத்திலிருந்தும் பிற்போக்கு நிலையிலிருந்தும் அந்தச் சமூகங்கள் விடுதலையடைவதற்கான ஒரு கருவியாக அமையும். எவ்வாறு பிரெஞ்சு மொழியானது, நவீன பிரெஞ்சு தேச அரசின் பரப்பிற்குள் கொண்டுவரப்பட்ட பாஸ்க்குகள், பிரெட்டன்கள், காடலான்கள் ஆகியோரின் சுதந்திரத்திற்கான மொழியாக ஆயிற்றோ அது போலவே ஆஸ்திரிய - ஹங்கேரியப் பேரரசிலிருந்த ஜெர்மானிய மொழியே செக் மக்கள், ஸ்லாவிய மக்கள் ஆகியோரின் சுதந்திரத்திற்கான மொழியாக அமையும் என்று அவர்கள் கருதினர்.

ஜேகோபின் புரட்சியாளர்கள், தமது செல்வாக்குப் பிரதேசங்களில் இருந்த பிரெஞ்சு அல்லாத தேசிய சமூகங்களை பிற்போக்குச் சக்திகளாகக் கருதியதைப் போலவே மார்க்சும் ஏங்கல்சும் தென் ஸ்லாவியர்களை பிற்போக்குவாதிகளாகக் கருதினர்.

'வரலாறு இல்லாத தேசங்களுக்கு' தன்னுரிமையையும் வரலாற்றுத் தொடர்ச்சியையும் மறுக்கும் இப் பார்வை 'வரலாறுடைய தேசங்கள்' என்று சொல்லப்படுவனவற்றில் விடுதலை, அரசு சுதந்திரம் ஆகியவற்றை நியாயப்படுத்துகிறது. ஏனெனில், 'வரலாறுடைய தேச சமூகங்கள்' வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்த வல்லவை. தனித்தனியான தேச அரசுகளை அவை உருவாக்கிக் கொள்வது, ஒரு வலுவான முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு உதவும். ஜெர்மனி, போலந்து, ஹங்கேரி, இத்தாலி அயர்லாந்து ஆகியவற்றின் ஐக்கியம், தன்னாட்சி, தேச அரசுகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கான போராட்டங்களை மார்க்சும் ஏங்கல்சும் ஆதரிக்கக் காரணம் அவை 'வரலாறுடைய தேசங்களாகும்.' அவை சுதந்திரம் பெற்று தேச அரசுகளை உருவாக்கிக் கொள்ளுமாயின் அவை தம் தேசங்களில் சமூக மாற்றங்களைச் செய்வதுடன் அவை அடிமைப்படுத்தி வைத்துள்ள தேசங்களிலும் சமூக மாற்றங்களைக் கொண்டு வரும். அயர்லாந்தை விடுவிக்காமல் இங்கிலாந்தால் ஒரு புரட்சிப் பாதையில் செல்ல முடியாது என்று மார்க்ஸ் கூறினார்.

அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு, அயர்லாந்து பொருளாதாரத்தின் குறை வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது என மார்க்ஸ் மூலதனம் நூலில்மிகத் தெளிவாக எடுத்துக் காட்டினார். இவ்வாறு அயர்லாந்தின் சுதந்திரம் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்திற்கு நன்மை பயக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

"மற்றொரு தேசத்தை ஒடுக்கும் தேசம் தனக்கே அடிமைச் சங்கிலியை வார்த்தெடுத்துக் கொள்கிறது" என்றார் மார்க்ஸ். ஆனால் இந்தப் புகழ்பெற்ற முழக்கத்தை மார்க்சோ ஏங்கல்சோ 'வரலாறு இல்லாத தேசங்களுக்கு' பயன்படுத்தவில்லை.

சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சி விதிகள் பற்றிய ஒரு இறுக்கமான பார்வை தேசம் = பூர்ஷ்வா வர்க்கம் = தேச அரசு என்ற விளக்கத்திற்கு இட்டுச் சென்றது. அது தேசிய இனப் பிரச்சனையில் சிக்கலான பரிமாணங்கள் முழுவதையும் பார்க்கத் தவறியது. [84]

மார்க்சும் ஏங்கல்சும், 1848 இல் பல்வேறு வகை ஆட்சிகளின் கீழ் சிதறுண்டு கிடந்த ஜெர்மானியப் பிரதேசங்கள் ஒன்றிணைந்து ஒன்றுபட்ட ஜெர்மானிய தேசம் ஒருவாக வேண்டும் என்று விரும்பினர். ஜெர்மானியப் புரட்சியின் முதல் கடமை, ஒன்றுபட்ட ஜெர்மனியை உருவாக்குவதுதான் என்றும் அதுதான் ஜெர்மனியிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் கோரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் மாக்ஸ் கூறினார். [85] ஆனால் அதற்கு முன்பேயே ஏங்கல்ஸ் "ஜெர்மனி ஒடுக்குமுறையிலிருந்து போலந்து விடுதலையடையாமல் ஜெர்மனியின் விடுதலை என்பது சாத்தியமே இல்லை" என்ற கருத்தைத் தெளிவாகக் கூறியிருந்தார் [86]. ஜெர்மனி எந்த அளவுக்குத் தன் அண்டை தேசங்களுக்கு விடுதலை வழங்குகிறதோ அந்த அளவுக்குத்தான் அதுவும் கூட சுதந்திரமடையும் என்று ஏங்கல்சும் "ஜெர்மனியில் பூர்ஷ்வா வர்க்கத்தின் மீது பாட்டாளி வர்க்கம் அடையும் வெற்றி அனைத்து ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலைக்கான சமிக்ஞையாக அமையும்" என்று மார்க்சும் எழுதினர்.

இத்தாலியில் தேசத்தை ஒன்றுபடுத்துவதற்காக நடந்த புரட்சியைக் குறித்து அவர்கள் எழுதினர். இத்தாலியில் (1849 இல்) ஏற்பட்ட தோல்வி கசப்பானது. போலந்து தேசத்தினர் தவிர வேறு எந்த மக்களுமே இதுபோலத் தமது அண்டை நாடுகளைச் சேர்ந்த பலமிக்க சக்திகளால் வெட்கக் கேடான முறையில் ஒடுக்கப்பட்டதில்லை. இத்தாலியர்களைப் போல வேறு எந்த தேச மக்களுமே ஒடுக்குமுறை நுகத்தடியைத் தூக்கியெறிவதற்காக இப்படித் திரும்பத்திரும்ப தீரமிக்க முயற்சிகளைச் செய்ததில்லை[88]. இத்தாலிய மக்கள் தமது போராட்டப் பாதையில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் ஜெர்மானிய மக்கள் கைதட்டி வரவேற்கிறார்கள் என்றும் தருணம் வாய்க்கும்போது ஆஸ்திரிய ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க போர்க்களத்தில் இறங்க அவர்கள் தயாராக இருப்பார்கள் என்றும் ஏங்கல்ஸ் எழுதினர்.

(தொடரும்)

82 Ibid
PP 63-64
83 Kar; Marx/ Frederich Engels
Collected works, Vol.8
(1848-49) Progress Publishers
Moscow, 1977, PP 234-235.
84. Ephraim Nimni
Op. cited, PP 65-66
85. Ronaldo Munck
The Difficult Dialogue
Marxism and Nationalism,
Oxford University Press
Madras, 1986, P. 9.
86. Karl Marx/Frederich Engels
Collected Works, Vol.6
(1845-1848) P.389.
87. Karl Marx/Frederich Engels
Collected Works, Vo.7
(1848) P.166.
88. Karl Marx/Frederich Engels
Collected Works, Vo.6
(1845-1848) P.555.

மணமக்களுக்கு வாழ்த்து

கவிஞர் மருதம். இரா. இராசேந்திரன் – செல்வி பூ.விசயா திருமணம் 12.4.99 அன்று நெய்வேலி நகரில் திரு – மருதூர் அரங்கராசனார் தலைமையில் இனிதே நிகழ்ந்தது.

மணமக்கள் தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சி நிதிக்கு ரூ.500/– வழங்கினார்.

மணமக்களுக்கு வாழ்த்துகள்.



படிப்பகம்

www.padippakam.com

# மக்கள், மக்களவை - ஒரு பார்வை

- கி. வெங்கட்ராமன்

நாடாளுமன்ற மக்களவை நீடிக்குமா அல்லது கலைக்கப்படுமா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக விவாதிக்கப்படுகிற நேரம் இது. இது ஒருபுறமிருக்க, இன்றைய வடிவத்தில் மக்களவை என்ற அமைப்பு தொடர வேண்டுமா, என்ற அடிப்படை வினாவுக்கு விடை காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

வடிவம் என்கிற போது இன்றைய பதினோராவது மக்களவையில் கட்சிகளின் சேர்க்கை மற்றும் கட்சிகளின் உறுப்பினர் எண்ணிக்கை என்ற வடிவத்தைப் பற்றி இங்கு விவாதிக்கவில்லை. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் மக்கள் தொகைக்கு ஏற்பட நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை தீர்மானித்து, அதனடிப்படையில் உருவாக்கப்படுகிற இன்றை மக்களவை அமைப்பையே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறோம்.

மக்கள் தொகை அடிப்படையில் மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவதால் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தும் மாநிலங்களுக்கு மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை குறைகிறது. அந்தவகையில் தமிழகம் கடுமையாகப் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது.

2000க்குப் பிறகு நடக்கும் தேர்தலில் மக்களவையில் தமிழ நாட்டு உறுப்பினர் எண்ணிக்கையை 39 லிருந்து 33 ஆகக் குறைக்க தில்லி அரசு திட்டமிட்டுள்ளது. தமிழ் நாட்டுக்கு மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை 39 ஆகத் தொடர தில்லி அரசு சட்டத்திருத்தம் செய்ய வேண்டும் என்று தமிழக சட்டமன்றம் ஒருமித்தத் தீர்மானம் இயற்றியுள்ளது.

அவ்வப்போது பிரச்சினை எழும்போது இவ்வாறு துண்டு, துண்டாக கோரிக்கை எழுப்புவதை விட மக்களவை அமைப்பைப் பற்றி மறு பரிசீலனை செய்வதே பொருத்தமானதாகும்.

இதனைப் பரிசீலிப்பதற்கு முன் ஜனநாயகம் (Democracy) 'மக்கள்' (People) என்ற சொற்களுக்குள்ள ஆழமான பொருளைப் புரிந்து கொள்வது அவசியம்.

மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் மக்களின் ஆட்சியே மக்களாட்சி, அதாவது ஜனநாயகம் என்பது புகழ் வாய்ந்த விளக்கமாகும். கருத்துச் சுதந்திரம் என்பது ஜனநாயகத்துக்கு மிக அடிப்படையான தேவையாகும்.

சரி, இங்கு 'மக்கள்' என்று கூறப்படுவதன் பொருளைப் பார்க்க வேண்டும். ஒரு அரசின் ஆட்சி எல்லையில் வாழும் பொதுவான மனிதக் கூட்டத்தை (Population) 'மக்கள்' என்று அழைப்பதில்லை.

**'மக்கள்' (People) என்றால் ஒரு பழங்குடியை அல்லது மரபினத்தை அல்லது தேசிய இனத்தைச் சார்ந்த மனிதக் கூட்டம் என்று ஆக்ஸ்போர்டு அகர முதலி வரையறுக்கிறது. (Persons composing a community of tribe. race or nationality). ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்த மனித சமூகமே மக்கள் என்று காலின்ஸ் அகரமுதலி விளக்கமளிக்கிறது. (a Community sharing a common nationality).**

'மக்கள்' என்பதன் பொருள் பற்றி ஐக்கிய நாடுகள் மன்றத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. பிரகடனத்தின் முதல் விதியின் இரண்டாம் பத்தியிலேயே கீழ்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"மக்களின் தன்னுரிமை மற்றும் சம உரிமைகளை மதித்து ஒழுகுவதன் அடிப்படையில் தேசங்களுக்கிடையே நட்புறவை வளர்ப்பது" ஐ.நா.வின் கடமை என்பதே அது. (To develop friendly relations among nations based on respect



படிப்பகம்

www.padippakam.com

for the principles of equal rights and self-determination of peoples).

1960களில் இந்த பத்தியில் கூறப்பட்ட 'மக்கள்' என்ற சொல்பற்றியும், 'தன்னுரிமை' என்றுதன் பொருள் பற்றியும் விவாதம் எழுந்தது. மக்கள் என்பதற்கு தாராளமாக பிணைப்பை ஏற்படுத்திக் கொண்ட தனிமனிதர்களின் கூட்டம் என்றும் (group of individuals) 'தன்னுரிமை'யில் உள்ள தன் (self) என்பது தனிநபரின் ஆளுடைமை (personal) உரிமையைக் குறிக்கும் என்று பிரிட்டன் வாதிட்டது.

இதனை மறுத்த ஐ.நா. மன்றச் செயலகம் 'மக்கள்' என்பதற்குத் தெளிவான அதிகாரப்பூர்வ விளக்கத்தை அளித்தது. 'மக்கள்' என்பதற்கு ஒரு அரசு அதிகாரத்திற்குட்பட்ட எல்லையில் வாழும் குடி மக்கள் (citizen) என்று குறுகிய பொருள் கொள்ளக் கூடாது என்று ஐ.நா. செயலகம் கூறியது. ஐ.நா. பிரகடனத்தின் முதல் விதியின் இரண்டாம் பத்தியில் தேசம் அல்லது 'அரசு' என்ற சொற்களைத் தவிர்த்து விட்டு 'மக்கள்' என்ற சொல்லைப் பயன்படுத்தியதற்குக் காரணம், தேச அரசுகளை இன்னும் உருவாக்கிக் கொள்ளாத இனங்களுக்கும் தன்னுரிமை உண்டு என்பதை வலியுறுத்தத்தான் என்று ஐ.நா. செயலகம் விளக்கமளித்தது.

இந்த அடிப்படையில் 'மக்கள்' என்பதற்கு கீழ்வரும் வரையறையை ஐ.நா. செயலகம் அளித்தது.

**"தமக்கென்று தனித்த தாயகத்தை கொண்டுள்ள, வரலாறு, இனம் மரபு, பொருளாதாரம் ஆகியவற்றால் இணைந்த தனித்த ஆளும் தகுதி பெற்ற சமூகக் குழுவே மக்கள் எனக் குறிக்கப்படுகிறது"**

மேற்கூறியவற்றிலிருந்து 'மக்கள்' என்பதற்கு 'தேசிய இனம்' என்பதே பொருளாகும் என்று புலனாகும்.

**எனவே மக்களவை என்பது தேசிய இனங்களின் அவையாக இருக்க வேண்மே அல்லாது, இந்திய ஆட்சிக்குட்பட்ட குடிமக்களின் (citizenry) அவையாக இருக்கக் கூடாது என்பது தெளிவு.**

ஜனநாயகம் என்பதற்கு ஒவ்வொரு குடி மகனுக்கும் அல்லது குடிமகளுக்கும் சம உரிமை என்பதாக மட்டும் பொருள் கொள்ளக் கூடாது. ஒவ்வொரு 'மக்களுக்கும்' அதாவது தேசிய இனத்திற்கும் சம உரிமை இருக்க வேண்டும் என்பதையும் இணைத்துப் பார்த்தால்தான் ஜனநாயகம் என்பதற்கு முழுப் பொருளை உணர முடியும்.

எனவே, வயது வந்த ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு வாக்கு என்பதோடு, ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் சம வாக்கு என்பதாக ஒழுங்கமைக்கப்பட்டால்தான் உண்மையான ஜனநாயகமாகத் திகழ முடியும்.

இந்த அடிப்படையில் இந்தியக் கூட்டாட்சியில் விரும்பி இணைகிற தேசிய இனம் ஒவ்வொன்றுக்கும் சம எண்ணிக்கையில் மக்களவை உறுப்பினர் இருந்தால்தான் அது உண்மையான கூட்டாட்சியாக இருக்க முடியும்.

அதாவது மக்களவையைப் பொருத்தவரை, அதன் அடிப்படை அலகு அந்தந்த தேசிய இனங்கள் தாமேயன்றி, தனித்தனி குடிமகன் அல்லது குடிமகள் அல்லர். எனவேதான் மக்களவைக்கு தில்லி அரசு நேரடித் தேர்தல் நடத்தக் கூடாது என்கிறோம். (காண்க 'தமிழர் கண்ணோட்டம்' மார்ச் 1999) அந்தந்த தேசிய இனங்களும் தமக்குள் தேர்தல் நடத்தி அப்பிரதிநிதிகளை அனுப்பலாம்.

எல்லா தேசிய இனங்களுக்கும் சம எண்ணிக்கையில் மக்களவை உறுப்பினர் இருக்க வேண்டுமென்கிற போது, சிறிய இனம், பெரிய இனம் என்ற வேறுபாட்டிற்கு இடமில்லை. உ.பி, ம.பி. தில்லி, பீகார், அரியானா என இந்தி தேசிய இனத்திற்கு தனித்தனி மாநிலங்கள் இருக்கின்றன. இவைகளுக்குத் தனித்தனியேபிரதிநிதித்துவம் வழங்கும் போது இந்தி தேசிய இனத்திற்கு அதிகமான எண்ணிக்கை வந்து விடும். இதனைச் சமன்படுத்த புதிய உத்திகள் வகுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

இவ்வாறு "மக்கள்" என்பதன் உண்மையான பொருள் உணர்ந்து தேசிய இனங்களின் பிரதிநிதிகள் அவையாக நாடாளுமன்ற மக்களவையை சீரமைத்தால் மாநிலங்களவை என்ற ஒன்று தனியே தேவை இல்லை.

இவ்வாறான தேசிய இனங்களின் போராளர் அவையை உருவாக்க தமிழர்கள் குரல் கொடுக்க வேண்டும்.♦



படிப்பகம்

www.padippakam.com

# எழுத்துச் சீர்மை- 2


## (உகர, ஊகாரம்)


**சென்ற இதழ்த் தொடர்ச்சி**

- க. குழந்தைவேலன்
தொல்லியல் ஆய்வாளர்.

வடமொழி திணிக்கப்பட்டு வலுவாகக் காலூன்றிய வேளையில், ஆட்சியாலும், மொழியாலும் வடபுலத்தினின்று தென்னகம் ஓரளவுக்கும், தமிழகம் பேரளவுக்கும் தன்னை விடுவித்துக் கொண்டன. தெற்கே காலூன்றிய வடமொழியினர் வடபுலத்தோடுள்ள உறவு குறுகிவிட்டமையால் தாம் கால் கொண்ட மண்ணையும் மண்ணின் மைந்தரையும் சார்ந்தே வாழ வேண்டிய இன்றியமையாமை நேர்ந்தது. அதனால் பண்பாடு, மொழி எழுத்துக்களின் வரிவடிவடிங்களில் மண்ணின் மரபையும் ஏற்றுக் கொண்டு அதனூடாகத் தம்மையும் வெளிப்படுத்திக் கொண்டனர். மற்றவற்றை விட எழுத்துக்களின் வரிவடிவில் இதனை ஆழமாகக் காணலாம்.

தமிழ் எழுத்துக்களின்(ஒலி) வரிவடிவோடு தம்முடைய மொழியின் மிகை ஒலிகட்கு படைத்துக்கொண்ட வரிவடிவுகளும் தமிழ் எழுத்துக்களைச் சார்ந்து தமிழ் நாட்டுச் சாயலிலேயே வளர்ந்தன. தமிழ் எழுத்துக்களில் ழ ற ன ஒழிந்த எழுத்துக்களும், வடமொழியின் வருக்க மற்றும் மெல்லொலிகள் ஒழிந்த எழுத்துக்களும், ஆகிய தமிழ் எழுத்துக்களே இருமொழிக்கும் பொது எழுத்தும், பொது வரிவடிவும் ஆயின. வருக்க மற்றும் மெல்லொலி எழுத்துக்களும் வடபுலச் சாயலைப் பெரிதும் தவிர்த்தும் இப்பொது வெழுத்துக்களின் சாயலையே பெற்றன. இந்நிலையில் தமிழை எழுதப் பயன்படுத்தப்பட்ட பொதுஎழுத்தும் + ற, ழ,ன எனும் சிறப்பெழுத்தும் தமிழ் எழுத்தென்றும், பொது எழுத்து + தமிழ்ச் சாயல் பெற்ற வருக்க, மெல்லொலி எழுத்துகள் கிரந்தம் என்றும் இருவேறு பெயர்களைப் பெற்றன.

பொது எழுத்துகள் இரு மொழிக்கும் பொது எழுத்தெனினும் வடமொழியை எழுதப் பயன்படுத்தும் பொழுது அப்பொது வெழுத்துக்களில் குத்துக் கோடுள்ள வரிவடிவங்களை இரட்டைக் கோடுகளாக (  அ,க, ண,ர) மாற்றி சிறு வேறுபாட்டுடன் எழுதினர். அவ்விரட்டைக் கோடுகள் மிகப் பிற்காலத்தில் பெரிதும் மறைந்துவிட்டன. இவ்வாறு பொது வெழுத்தாலும் சிறப்பெழுத்தாலும் தமிழ்ச் சாயல் பெற்ற கிரந்தம், தமிழ்நாட்டில் மட்டுமே வடமொழியை எழுதப் பயன்பட்டது. வேறு எங்கும் பயன்படுத்தப்படவில்லை. எனினும் தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளான தமிழ்க் கிளை மொழி எழுத்துக்கள் இவற்றை அடியொற்றி வளர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது.[12] இதன் வளர்ச்சியில் தமிழ் மண்ணுக்கும், தமிழர்க்கும், தமிழ் மொழி மற்றும் எழுத்துக்கும் பெரும் பங்குண்டு. எனவே இவ்வெழுத்துக்களின் ஒலி வடிவம் வடமொழியினுடையதாக இருந்தாலும் வரிவடிவம் தமிழ் நாட்டு வடிவமே என்பதில் ஐயப்பாட்டிற்கு இடமே இல்லை.

ஒரே மண்ணில் ஒத்து வளர்ந்த தமிழ், கிரந்த வரிவடிவ எழுத்துக்களின் உயிர் மெய்க் குறியீடுகளிலும் எவ்வகை,வேற்றுமையும் இல்லை. குறிப்பாக இங்கு நமக்குத் தேவையான உகர, ஊகாரக் குறியீடுகளும் எவ்வகை வேற்றுமையும் இன்றி ஒத்தே காணப்பட்டன. எனினும், பழந்தமிழ் எழுத்துக்கள் தமிழ் மற்றும் வடமொழிக்காகப் பயன்படுத்தப்பட்ட பொழுது வடமொழி எழுத்தான கிரந்தத்தில் ஒற்றைக் குத்துக்கோடுகள் இரட்டைக் கோடுகளாக வேறுபடுத்திக் காட்டப்பட்டன. என (கி.பி.7,8 நூற்றாண்டு அளவில்) முன்பே கூறியது போன்று, கீழ்ப்பக்கம் வளைந்தும், தட்டையாகவும் உள்ள எழுத்துக்களின் கீழ் தொங்கியது போன்று இடப்பட்ட உகரக் குறியீட்டுச் சிறு குத்துக்கோடுகள்(  சு,டு,ணு,மு -சூ,டூ,ணூ,மூ, ) இரட்டித்தன. அஃதாவது எழுத்தின் இடது அடிப்பகுதியை ஒட்டி கீழ்நோக்கிச் சென்று திரும்பி மேல் நோக்கி வந்து முடித்துக் காட்டப்பட்டன. (  சு, மு) இக்குறியீட்டின் வளர்ச்சியில் கி.பி.14,15 ஆம் நூற்றாண்டு வரை வேறுபாடு எதும் தென்படவில்லை. 16,17 நூற்றாண்டு வாக்கில் கீழ்ப்புறம் ஒட்டிய இரட்டைச் சிறு கோடுகள்



படிப்பகம்

விரிந்து மடங்கி ஒரு சிறு சதுர வடிவைப் பெற்றன ( [illegible] [illegible] [illegible] யு, ஸு,மு).

இடது கீழ்ப்புறம் தொடங்கவிடப்பட்ட சிறு சதுரக் குறியீடு (d) காலஞ்செல்லச்செல்ல வரிவடிவின் உருவ உயர மாறுபாட்டாலும், வளர்ச்சியின் காரணமாகவும் பையப் பைய இடது புறம் மேல் நோக்கி உயர்ந்தது. இவ்வுயர்ச்சி கி.பி. 17,18 ஆம் நூற்றாண்டு வாக்கில் எழுத்துக்களின் இடது நடுப்பகுதியை அடைந்து விட்டன. ( [illegible] [illegible] யு மு ) இதனை பிற்காலத்து பாண்டியர், நாயக்கர், மராட்டிய மன்னர்களின் செப்பேடுகளில் காணலாம். அதன் பின்னர் மேலும் வளர்ந்து இடது மேல் பகுதிக்குக் கிடையாக(ஜு,ஸூ) வளர்ச்சி பெற்றதை 18,19 ஆம் நூற்றாண்டு ஓலைச்சுவடிக்களில் காணமுடிகிறது. ஏறத்தாழ இக்கால கட்டத்தில் வளர்ச்சி நிறைவு பெற்று உகரத்திற்கு எழுத்துக்களின் மேல் இடப்புறத்தில் (ு) என்ற குறியீடும், ஊகாரத்திற்கு ஒரு சுழியுடனும் கூடிய (ூ) என்ற குறியீடும் நிலைபெற்று பின் வந்த அச்சு நூல்களிலும் இடம் பெற்றன. இது காறும் பிற உயிர் மெய்க்குறியீடுகள் போலல்லாது எழுத்துக்களுடன் ஒட்டி வந்த உகர, ஊகாரக் குறியீடுகள் தனித்து எல்லா எழுத்துக்களுக்கும் பொதுவான சீரொழுங்கான குறியீட்டு வடிவைப் பெற்றன.

ஆனால் தமிழ் எழுத்துக்களுக்குத் தெடக்கத்தில் இடப்பட்ட அதே குறியீடுகள் இறுதிவரை மூல எழுத்தை விட்டுப் பிரியாமலும் பிரிக்கப்படாமலும் வளர்ச்சி பெற்று ஒவ்வொரு மெய்யெழுத்திற்கும் உருவத்திற்கேற்ற வளர்ச்சியின் காரணமாக தனித்தனி உருவைப் பெற்றன. கி.பி. 18,19 ஆம் நூற்றாண்டில் கிரந்தத்தில் ஏற்பட்ட மாற்றம் தமிழில் ஏற்பட வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இத்னால் உகர, ஊகார எழுத்துக்களின் வரிவடிவு சீரான ஒரு குறியீட்டைப் பெறாமல் எண்ணிக்கை பெருகிவிட்டது.

அச்சுக்கலையில் புரட்சியும், அறிவியலில் விரைவும் பெறுவதற்கு முன்வரை நம் எழுத்துப் பெருக்கத்தால் சிக்கல் ஏதும் எழவில்லை. ஆனால் புதிய அறிவியல் விரைவிற்கேற்ப நாமும் விரைவதற்குச் சிறு சிறு தடைகள் கூட சலிப்பைத் தோற்றுவிப்பது உண்மையே. முயற்சி இல்லாதவர்கள் இச்சிறு தடைகளைப் பெரிது படுத்திக் காட்டலாம். இவற்றையெல்லாம் களைவதற்கு நம்மிடையே வளர்ந்த உகர ஊகாரக் குறியீடுகளை (ு,ூ) நமது எழுத்துக்களில் பொருத்தி எளிமைப்படுத்துவ தொன்றே வழி. இதனால் 36 உகர, ஊகார எழுத்துக்களை நமது அச்சுப் பொறிகளிலும், தட்டச்சுப் பொறிகளிலும் குறைத்து அவற்றுக்கு மாறாக இரண்டு குறியீடுகளை மட்டுமே பயன்படுத்தி எளிமை காணலாம். நமது எழுத்துக்களைக் கற்கும் குழந்தைகட்கும், அயன் மொழியாளர்க்கும் எழுத்தில் சீரொழுங்கை (Unitormity) ஏற்படுத்தி கற்பதை எளிமையும் இனிமையும் ஆக்கலாம்.

மேலும் தமிழ் நாட்டு வரிவடிவான கிரந்தமும் தொடக்க முதல் இதுகாறும் தமிழ் மண்ணில், தமிழ் எழுத்துக்களிலிருந்து தோன்றி, தமிழ் எழுத்துக்களைச் சார்ந்தே வளர்ந்தமையாலும் தமிழ் நாட்டிலன்றி பிறிதெங்கும் வழங்காமையாலும்[12] இதன் வளர்ச்சியில் தமிழ் மண்ணுக்கும், மைந்தர்க்கும், மொழிக்கும் பெரும் பங்குடைமையாலும் இவ்வுகர ஊகாரக் குறியீடுகளைப் (ு ூ) பயன்படுத்துவ்தால் தமிழ் மரபுக்கு எவ்வகையிலும் ஊறு நேராது. இது நமது மரபு வழி வந்ததே ஆகும். பிறமொழியைக் கடன் கொண்டோம் என்ற நெருடலும் நமக்கு இராது.

இவ்வுகர, ஊகாரச் சிக்கல் நமக்கு மட்டும் ஏற்பட்டதன்று. நமது எழுத்துக்களின் வழித் தோன்றலான மலையாள மொழியிலும் இது போன்ற சிக்கல் நெருடலாக இருந்தது. சற்றேறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன் அக்குறியீடுகளில் சீரொழுங்கை ஏற்படுத்தி அச்சிக்கலை இன்று முற்றிலும் தவிர்த்து விட்டனர். ஏனைய இந்திய மற்றும் திரர்விட மொழிகளும் உகர, ஊகாரங்களுக்குப் பொதுவான சீரொழுங்குக் குறியீடுகளையே பயன்படுத்துகின்றன. ஆதலின் நமது உகர, ஊகாரங்களும் சீரொழுங்குப் பொதுக் குறியீடுகளைப் பெறுதல் காலத்தின் தேவை. மரபு பிறழாத நமது (ு ூ) உகர ஊகாரக் குறியீடுகளை ஏற்று குறை களைந்து நிறை போற்றி வளர்ப்போம், உயர்வோம். உலகின் இன்றைய அறிவியல், கணினி இயல் வளர்ச்சியால் நமது எழுத்துக்களால் வேறு சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே இவையன்றி வேறு மாற்றங்களும் நமது எழுத்துக்களில் தேவையில்லை. மிகையான மாற்றங்கள் நமது மரபை குலைத்துவிடும்.

**அடிக்குறிப்பு**

12. கிரந்த எழுத்துக்கள் பல்லவருடைய ஆட்சியின் காரணமாக தென் கிழக்காசிய நாடுகளில் பரவி வளர்ச்சி பெற்று இன்று அந்நாட்டு எழுத்துக்களாகப் புத்துருப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் கிரந்த எழுத்தின் வரிவடிவ வளர்ச்சியின் தொடக்கமும் முடிவும் தமிழகத்தைச் சார்ந்ததே.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி நடத்திய தீண்டாமை ஒழிப்பு- தமிழர் ஒற்றுமை பிரச்சார இயக்கம்

### விழுப்புரம்

தமிழ்த் தேசப் பொதுவுடைமைமைக் கட்சியின் வட மாவட்டக் குழு சார்பில் தீண்டாமை ஒழிப்பு- தமிழர் ஒற்றுமை பிரச்சார இயக்கம் பிப்ரவரி 5,6,7 ஆகிய மூன்று நாட்கள் விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு பகுதியில் நடைபெற்றது.

கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு வேலை வாய்ப்பு, அவர்களது குழந்தைகளுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு, காதல் திருமணங்களில் காவல் துறையின் கெடுபிடிகளை நீக்க இதற்கென தனி நீதிமன்றம், தனி காவல் பிரிவு, தாழ்த்தப்பட்டோர் இழி தொழில் நீக்கல், நவீன மின்சார சுடுகாடுகள், கிராமப் பொதுச் சொத்துக்களில் தாழ்த்தப் பட்டவர்களுக்கும் உரிய பங்கு அளித்தல். நலிவடைந்த அனைத்து சாதிப் பிரிவினர்க்குமான பொது தொகுப்பு வீடுகள், அனைத்து சாதியினர்க்குமான பொது மாணவர் விடுதிகள், எந்த சாதியைச் சார்ந்தவரும் அர்ச்சகராகும் உரிமை முதலான பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் தழுவி நடைபெற்ற இப்பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக 5.2.99 அன்று வெள்ளிமேடுப் பேட்டையில் நடைபெற்ற கூட்டத்திற்கு திரு. பாக்கியராஜ் தலைமையேற்க ஆசிரியர் சுப்பிரமணி முன்னிலை வகித்தார்.

6.2.99 அன்று ஒலக்கூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு திரு அரங்கசாமி தலைமை ஏற்க திரு. தெய்வக்கன்னு முன்னிலை வகித்தார். 7.2.99 அன்று ஒலக்கூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சு. சீனிவாசன் தலைமை ஏற்க மா.பெ.பொ.க. தோழர் தில்லை நாயகம் முன்னிலைவகித்தார்.

கிராமப் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்ட இப்பொதுக் கூட்டங்களில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் வட மாவட்டச் செயலாளர் தோழர் இராசேந்திர சோழன், மக்கள் கல்வி இயக்கம் பேரா. பா. கல்யாணி, ஆசிரியர்கள் மு. கந்தசாமி, வ. பலராமன், து. செயராமன், சுப்பிரமணி, மணி, ஸ்ரீதர், அம்பலவாணன், திண்டிவனம் நசீர் அகமது, சிங்கனூர் வனராஜ் மற்றும் தமிழக இளைஞர் முன்னணி அமைப்பைச் சார்ந்த தோழர்கள் ம.பாபு, தமிழரசன், ஆனந்தன், மதியழகன், சந்திரபாபு, சக்கரபாணி, ரவி முதலானோர் உரையாற்றினர்.

### மயிலம்-திண்டிவனம்

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, மற்றும் தமிழக இளைஞர் முன்னணி சார்பில் தீண்டாமை ஒழிப்பு தமிழர் ஒற்றுமை பிரச்சார இயக்கம் மயிலம் திண்டிவனம் பகுதியில் நடைபெற்றது.

இவ்வியக்கத்திற்கு தோழர் ம. பாபு (த.இ.மு) தலைமை தாங்க தோழர் இராசேந்திர சோழன் தொடக்கி வைத்து உரையாற்றினார். தோழர்கள் இரா. முருகன், சு. ஆனந்தன், சு. மதியழகன், க. சக்திவேல், இரா. மணி, சந்திரபாபு ஆகியோர் உரையாற்றினர்.

பிற்பகல் திண்டிவனத்தில் நடைபெற்ற பிரச்சார இயக்கத்திற்கு வழக்கறிஞர் த. பவணந்தி தலைமையேற்றார். தோழர்கள் இராசேந்திர சோழன் (த.தே.பொ.க.) பேரா. பா. கல்யாணி (ம.க.இ.) ஆசிரியர் மு. கந்தசாமி, ஆசிரியர் இராஜகோபால் ஆகியோர் உரையாற்றினர்.

தோழர்கள் சு. ஆனந்தன் , த. சக்திவேல் கோரிக்கைகளை விளக்கி இசைப் பாடல்களை முழங்கினர்.



படிப்பகம்

www.padippakam.com

## நூல் புதிது

நூல் : **எம்.ஜி. ஆரும் ஈழத்தமிழரும்**
(உரைநடை)
ஆசிரியர்: வே. தங்கநேயன்
விலை : உருபா 25.00
பக்கங்கள்: 144
வெளியீடு: மணி பல்லவம் பதிப்பகம்
280, அண்ணாசாலை,
புதுச்சேரி.

இந்நூலில் எம்.ஜி.ஆர் ஈழத்தமிழருடன் தனிப்பட்ட முறையிலும், அரசியல் வழியிலும் உறவுபூண்டு அவர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் அவர் செய்த நன்மைகளையும், தமிழீழத்தின் பால் அவர் கொண்டிருந்த அன்புடன் கூடிய கவனத்தையும், அவர் இப்பிரச்சனையில் அரசியல் ரீதியாக தமிழக மக்களிடம் எவ்வாறு காட்டப்பட்டார் என்பதையும் ஆனால் உண்மையாக ஈழத்தமிழர்களின் வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த முழு ஈடுபாட்டையும் அரசு, அரசியல், தனி நபர் என சான்றுகளோடு ஆசிரியர் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறார்.

நூல் : **வெட்கம் தொலைத்தது**
(கவிதைத்தொகுப்பு)
ஆசிரியர்: நா. விச்வநாதன்
விலை : உருபா 20.00
பக்கங்கள்: 48
வெளியீடு: ரிஷபம் பதிப்பகம்
இரண்டாவது தளம்
எண். 31/45 இராணி அண்ணா நகர்
பி.டி. இராஜன் சாலை
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078.

சமூகத்தின் பல பிரச்சனைகளையும், அதன் விளைவுகளையும், சுட்டி அதனில் தனது சிந்தனையும் புகுத்தி புதுக்கவிதைக்குப் புதுமை சேர்த்திருக்கிறார் இந்நூலின் ஆசிரியர்.

நூல் : **காயங்கள்**
(சிறுகதைத் தொகுப்பு)
ஆசிரியர்: ஞானி
விலை : 20/-
(பெண்களுக்கு நூலின் அடக்க விலை உருபா 12/- மட்டும்)
பக்கங்கள்: 84
வெளியீடு: நிகழ்
123, காளிசுவரா நகர்
கோயமுத்தூர் - 641 009.

இந்த இருண்டகாலம் மாற வேண்டும் என்பதற்காக விடிவு காலத்தைத் தேடி சமூக விரோத தீப்பொறிகளால் ஏற்பட்டக் காயங்கள் காய்ந்திட வேண்டும் என மனிதன் வாழும் வரையிலும் தடை ஓட்டங்கள் இருப்பினும் அவற்றிற்கு எதிரியாக மனித நேயத்தோடு ஏற்றத்தாழ்வுகளற்ற சமூகம் அவரங்கேற்றமாக அமைதிப் புறா அங்கு கூடு கட்டுமாறு முற்போக்கு சிந்தனையாளர்களாய் சமூகச் சிற்பிகளும், நாட்டின் கண்மணிகளுமான பெண் எழுத்தாளர்கள் பன்னிருவர் படைத்த முத்துக் குயைல் தான் இந்நூல், படித்துப் பயன் பெறுவீர்.

நூல் : **இருளர் மீது தொடரும் வன் கொடுமைகள்**
(கட்டுரைத் தொகுப்பு)
தொகுத்தவர்: பேரா. பா. கல்யாணி
விலை : உருபா 10.00
வெளியீடு: பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம்
எண் 30/1, கல்லூரிச் சாலை,
திண்டிவனம் - 604 001.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இருளர் என்னும் பழங்குடி மக்கள் தமிழ் நாட்டில் திருவண்ணாமலை , விழுப்புரம் மாவட்டப் பகுதிகளில், சமவெளியிலும் மலைப் பகுதிகளிலும் கணிசமாக வாழ்கிறார்கள் இவர்கள் காவல்துறையினரும் கிராம ஆதிக்கச் சக்தியினரும் இவர்களை எவ்வாறு துன்புறுத்திகின்றனர் என்ற விவரங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டு உள்ளன. இருளர் மீது தொடரும் வன் கொடுமைகள் காவல்துறையில் புகார் செய்யப்பட்டு உள்ள விவர அட்டவணையும் இதில் உள்ளது. பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம் என்ற அமைப்பு இவர்களுக்குப் பாதுகாப்பாக எடுத்து வரும் நடவடிக்கைகள் இதனில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொகுப்பாசிரியர் பேரா. பா. கல்யாணி.



படிப்பகம்

www.padippakam.com

# பட்டினிப் போரே சென்னையில் மொழிப்போர்க்களமோ தமிழகமெங்கும் 23.3.99 அன்று நடந்த அடையாளப் பட்டினிப்போர்

தமிகத்தில் தொடக்கக் கல்வியைத் தமிழில் வழங்கவும், ஐந்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட நிலையில் ஆங்கிலத்தை ஒரு மொழிப்பாடமாக மட்டுமே கற்பிக்க வேண்டும் என்றும் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம் முதலிய உயர்நிலை அறிவியல் பாடங்களையும் தமிழில் உடனே வழங்க வேண்டும், என்றும் தமிழை மற்றும், தமிழ் வழியை ஏற்றுப் படித்தத் தமிழ் மக்களின் பிள்ளைகளுக்கு தமிழகத்தில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கோரியும் எதிர்வரும் 25.4.99 அன்று 100 தமிழ் உணர்வாளர்கள் நடத்த உள்ள சாகும் வரைப் பட்டினிப் போரை ஆதரித்துச் தமிழகமெங்கும் நடந்த அடையாள பட்டினிப் போர்கள் தமிழ் மக்களின் எழுச்சியைக் காட்டும் வகையில் அமைந்தது.

### சென்னை

குறளகம் முனுபாக சிலம்பொலி, செல்லப்பனார் தலைமையில் சுமார் 1500 பேர் அடையாளப் பட்டினிப்போர் நடத்தினர்.

### ஈரோடு

ஈரோடு தமிழ் அமைப்புகள் அனைத்தும் இணைந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு சுமார் 75 பேர் திரண்டு பட்டினிப் போர் நடத்தினர்.

### திருப்பூர்

இளந்தமிழர் முன்னேற்றப் பேரவை மற்றும் திருப்பூர் நகர் தமிழ் அமைப்புகள் அனைத்தும் இணைந்து பழைய பேருந்து நிலையமருகில் சுமார் 120 பேர்கள் பேரவைத் தலைவர் ம. அறுச்சாமி தலைமையில் அடையாளப் பட்டினிப் போர் நடத்தினர்.

### சிதம்பரம்

தமிழ்க்காப்பணி தலைவர் முனைவர் ச. மெய்யப்பன் அவர்கள் தலைமையில் மேல வீதியில் சுமார் 100 பேருடன் அடையாளப் பட்டினிப் போர் நடந்தது.

### குமாரப்பாளையம்

இ.ஐ.பொ.க.வின் மாநிலக்குழு உறுப்பினர் ப.பா.மோகன் தலைமையில் பேருந்து நிலைமருகில் சுமார் 100 பேர் திரண்டு பட்டினிப்போர் நிகழ்த்தினர்.

### பட்டுக்கோட்டை

பட்டுக்கோட்டை பெரியார் சிலையருகுல் இராம. இளங்கோவன் தலைமையில் சுமார் 75 பேர் கொண்ட பட்டினிப்போர் நடந்தது.

### அம்பத்தூர்

த.தே.பொ.க. வின் தோழர் அ. பத்மநாபன் தலைமையில் அம்பேத்கார் சிலையருகில் 50 பேருடன் பட்டினிப்போர் நடந்தது.

### சத்தியமங்கலம்

இங்கு சுமார் 100 தமிழ் உணர்வாளர்கள் அடையாளப் பட்டினிப்போர் நடத்தினர்.

### கோபிச்செட்டிப்பாளையம்

கோபிச் செட்டிப்பாளையத்தில் சுமார் 100 போர் அடங்கிய குழு அடையாளப் பட்டினிப்போர் நடத்தியது.

### காஞ்சிபுரம்

இங்கு சுமார் 100 தமிழ் ஆர்வலர்கள் அடையாளப் பட்டினிப்போர் நடத்தினர்.

### திண்டிவனம்

தமிழ் அமைப்புகள் சார்பில் சுமார் 75 பேர் இங்கு அடையாளப் பட்டினிப்போர் நடத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com

### விழுப்புரம்

சுமார் 75 தமிழார்வலர்கள் சூழ அடையாளப் பட்டினிப்போர் நடந்தது.

### திருச்சி

மாவட்டத் தமிழ் அமைப்புகள் அனைத்தும் இணைந்து 29.3.99 அன்று முனைவர் திருமாறன் தலைமையில் சுமார் 150 பேருடன் அடையாளப் பட்டினிப் போர் நடந்தது.

### தஞ்சை

தமிழகத் தமிழாசிரியர் கழகத்தார் புலவர் மூ.பண்டரிநாதன் தலைமையில் தஞ்சைத் தமிழ் அமைப்புகள் அனைத்தும் இணைந்து 200 பேர் தமிழ் வழிக் கல்வியின் அவசியத்தை உணர்த்த அடையாளப் பட்டினிப் போர் நடந்தது.

### குடந்தை

தோழர் விடுதலைச்சுடர் தலைமையில் சுமார் 150 பேர் பட்டினிப் போராட்டம் நடத்தினர்.

### திருத்துறைப்பூண்டி

இரா. கோவிந்தசாமி (த.தே.பொ.க.) தலைமைச் செயற்குழு உறுப்பினர் தலைமையில் சுமார் 60 பேர் அடையாளப் பட்டினிப்போர் நடத்தினர்.

### சென்னை - இராயப்பேட்டை

ஓவியக்கவிஞர், வண்ணப்பூங்காவாசன் தலைமையில் தெருமுனை விளக்கக் கூட்டம் தமிழ் வழிக் கல்வியின் இன்றியமையாமை உணர்த்தி சுமார் 50 பேருடன் நடத்தது.

## மிதி வண்டிப் பிரச்சாரமும் தெருமுனை விளக்கக் கூட்டமும்.

10.4.99 அன்று தஞ்சை, திருத்துறைப்பூண்டி ஆகிய ஊர்களில், முறையே நாட்டார் கல்லூரி முதல்வர். பேரா. விருத்தாசலனார் மற்றும் இரா. கோவிந்தசாமி ஆகியோர் துவக்கி வைக்க பல இடங்களுக்குச் சென்று சுமார் 100 பேர் பிரச்சாரம் செய்தனர்.

### தலித் மணமகள் தேவை

ஓசூர் அசோக் லேலண்டில் ரூ.7500/ மாத ஊதியம் பெறும் 26 வயது பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த – தமிழ்த் தேசிய உணர்வு மிக்க தோழருக்கு தலித் வகுப்பைச் சேர்ந்த மணமகள் தேவை.

கல்வித் தகுதியும் தமிழ் உணர்வும் மணமகளுக்கு இருப்பது விரும்பத்தக்கது. வரதட்சனை இல்லை.

தொடர்பு முகவரி

தமிழர் கண்ணோட்டம்
53(அ) சமீன்தார் குடியிருப்பு
புது ஆற்றுச் சாலை
தஞ்சாவூர் – 613 001.

### எல்.கே.ஜி. – யு.கே.ஜி.

தெருமுனையில் மதபோதகர்,

சுமை சுமப்போரே!
என்னிடம் வாருங்கள்
என்றார்

வந்தார்கள்
எல்.கே.ஜி –யு.கே.ஜி
குழந்தைகள்!

இரெ. இராசகணேசன்
(இளங்கலைத் தமிழிலக்கியம்),
பூண்டி கல்லூரி



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் வழிக் கல்விக்காக ஏப் 26ல் சென்னையில் நடைபெறவிருக்கும் பட்டினிப் போரை விளக்கி ஏப்ரல் 10ல் தமிழக மெங்கும் மிதிவண்டி பிரச்சார இயக்கம் நடைபெற்றது.

தஞ்சாவூர்

தஞ்சை தொடர் வண்டி நிலையத்திலிருந்து பேரா. பி. விருத்தாச்சலம் தலைமையில் பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த மாணவ, மாணவியரும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களும் பங்கேற்ற மிதி வண்டி பிரச்சார இயக்கம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தொடர்வண்டி நிலையத்தில் தொடங்கி மேரி முனை, கல்லுக்குளம், நாஞ்சிக் கோட்டை சாலை, அண்ணா நகர், பூச்சந்தை, வண்டிக்காரத் தெரு, தொல்காப்பியர் சதுக்கம், கீழவாசல், கரந்தை, வடக்குவீதி, மேலவீதி, தெற்கு வீதி வழியாக மிதிவண்டி ஊர்வலம் பழைய பேருந்து நிலையத்தில் முடிவடைந்தது.

கோரிக்கைகளை விளக்கி, தோழர் பெ. மணியரசன், முனைவர் இளமுருகன், புலவர் செல்ல. கணேசன், ஆசிரியர் இளங்கோவன் ம. செந்தமிழன், பழ. இராசேந்திரன் உட்பட பலர் உரையாற்றினர்.

பட்டுக்கோட்டை

தமிழ் வழிக் கல்வியை வலியுறுத்தி பட்டுக் கோட்டையில் ஊர்வலம் பொதுக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

திரு. இராம. இளங்கோவன் தலைமையில் ஊர்வலம் பேருந்து நிலையத்தில் உள்ள தந்தை பெரியார் சிலையிலிருந்து புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக முழக்கங்களை எழுப்பிக் கொண்டு காசாங்குளம் வட கரையை சென்று அடைந்தது.

புலவர் சா. பன்னீர் செல்வம் ஊர்வலத்தை தொடங்கி வைத்தார்.

காசாங்குளம் வடகரை அண்ணா சீரணி கலையரங்கில் திரு. இராம. இளங்கோவன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பேரா. பெரியார் தாசன், தோழர் பெ. மணியரசன், முனைவர் இளமுருகன் புலவர் தங்க அன்புவள்ளி வழக்குரைஞர் பிரகாசம் உட்பட பலர் சிறப்புரையாற்றினார்கள்.

## மதவெறி எதிர்ப்பும் தமிழ்த் தேசியமும் விளக்கத் தெருமுனைக் கூட்டம்

தமிழக இளைஞர் முன்னணி தஞ்சை மாவட்டக் குழு சார்பில் 29.3.99 அன்று தஞ்சை கீழவாசலில் மதவெறி எதிர்ப்பும் தமிழ்த் தேசியமும் என்ற பொருளில் தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கிட்டு. மாரிமுத்து (மையக்குழு த.இ.மு.) தலைமை தாங்கினார்.

தோழர்கள் இராசேந்திர சோழன்(தலைமைச் செயற்குழு த.தே.பொ.க.) நா. வைகறை(பொதுச் செயலாளர் த.இ.மு.) ம. செந்தமிழன்(பொதுச் செயலாளர் த.மா.மு.), இராசு. முனியாண்டி (நகரச் செயலர் த.இ.மு.) வே. தனசேகரன் (மையக்குழு த.இ.மு.) ஆகியோர் சிறப்புரை ஆற்றினர் தோழர் ப. சந்திரசேகர்(நகரத் தலைவர் த.இ.மு.) நன்றி கூறினார்.

## சிதம்பரம்

23.3.97 அன்று சிதம்பரத்தில் தமிழ்க் களப்பணி சார்பில் தமிழ்வழி கல்விக் கோரி ஒரு நாள் அடையாள பட்டினிப் போராட்டம் முனைவர் ச. மெய்யப்பன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் அகஸ்தியலிங்கம் தொடக்கி வைத்தார். பேரா.அழ. பழநியப்பன், நமச்சிவாயம், பேரா.சுப்பையா, திருக்குறள் சாரங்கபாணி, சிதம்பரம் மயில்வாகனன், இராம ஆதிமூலம் ப.அறிவொளி, சுந்தர விநாயகம் மற்றும் தோழர்கள் ஆ. சிவஞானம் ச. மணிவண்ணன். பா. பிரபாகரன், த.பாலு, (த.தே.இ.), இரவி (த.தே.இ.) ஆகியோர் பேசினர். வடலூர் ஊரன் அடிகளார் அடையாளப் பட்டினிப் போராட்டத்தை முடித்து வைத்து உரையாற்றினார். தோழர் கு. சிவப்பிரகாசம் (த.தே.பொ.க.) நன்றி கூறினார். பட்டினிப் போராட்டத்திற்கு முன் ஏற்பாடுகளை த.தே.பொ.க. தோழர்கள் செய்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

நிறைகுறை தொடர்ச்சி

## தமிழ்த் தேசியர்களுக்கு

ஈழப் போராட்டத்திற்குப் பின்னர் எழுச்சி பெற்ற கிழக்கு தைமூர் போராட்டம், குர்து மக்களின் இன எழுச்சி, சமீபத்திய கொசோவா மக்களின் இன எழுச்சி போன்றவற்றிற்கு சர்வதேச அளவில் கிடைத்துள்ள ஆதரவும், அங்கீகாரமும் இன்றுவரை இன்னமும் தமிழீழப் போராட்டத்திற்குக் கிடைக்க வில்லை. அவ்வாறிருக்க நமது தோழர்கள் தமிழீழப் போராட்டம் பற்றி மட்டுமே பேசுவதும் அல்லது ஈழம் மலர்ந்தாலே தமிழ் தேசிய இனத்தின் விடுதலை வந்து விடும் என்பது போல பிரமை கொள்வதும் சரியல்ல.

ஈழம் மலர்ந்தால் அது தமிழ்தேசிய இனத்தின் வளர்ச்சியில் ஒரு உத்வேகத்தை ஊட்டுமே தவிர அது மட்டுமே நமது விடுதலைக்கு முழு வழி என நம்புவது சரியன்று.

தங்களின் கட்டுரை தமிழ்த் தேசியத் தோழர்களுக்கு சரியான தருணத்தில் சரியான பார்வையை அளித்துள்ளது.

-மலர் வண்ணன் - செய்யார்.

## மனங்கொள்ள வேண்டும்

தமிழ்த் தேசியமும் தமிழ் ஈழமும் கட்டுரைக்குப் பாராட்டு. தமிழ்த் தேசியர்கள் ஒன்றை மனம் கொள்ள வேண்டும். ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் பல படிநிலைகளைக் கடந்து வந்துள்ளது. விரல் விட்டு எண்ணக் கூடியவர்களால் தொடங்கப்பட்ட அது இப்போது மரபுப் படையாக வளர்ச்சியடைந்துள்ளது. மிக உயர்ந்த கட்டுப்பாடு, ஒழுக்க நெறிகள், குறிக்கோள் பற்றிய தெளிவு ஆகியவை ஈழத் தமிழர்களிடம் உள்ளதை தமிழ்நாட்டுத் தமிழர்கள் கருதிப் பார்க்க வேண்டும்.

-அமரன், தஞ்சை -2.

## திருத்தம்

சென்ற இதழில் மயிலம் த.இ.தோழர் த. சக்திவேலு திருமண வாழ்த்துச் செய்தியில் மணமக்கள் த.சக்திவேலு - விசயலட்சுமதி என இடம் பெறுதற்கு பதில் மணமகள் பெயர் மாறி இடம் பெற்று விட்டது. தவறை திருத்தி வாசித்துக் ளொள்ளக் கேட்டுக் கொள்கிறோம். தவறுக்கு வருந்துகிறோம்.

- ஆசிரியர்

## வேதாரணியத்தில் புறப்பட்ட தமிழ் ஊர்தி

தமிழ் வழிக் கல்விக்காக ஏப்ரல் 25 -ல் சென்னையில் தொடங்கும் பட்டினிப் போராட்டத்தின் நோக்கங்களை மக்களுக்கு விளக்குவதற்காக வேதாரணியத்திலிருந்தும் குற்றாலத்திலிருந்தும், போடி நாயக்கனூரிலிருந்தும் மூன்று பிரச்சார தமிழ் ஊர்திகள் தனித் தனியே 17.4. 99 அன்று புறப்பட்டன.

வேதாரணியத்தில் தமிழ் ஊர்தி எழுச்சியான தொடக்க விழாவோடு பயணம் புறப்பட்டது. இவ்வூர்தியில் திரு. ஆர்.எம். இராமசாமி அவர்களும் மாணவர்கள் சிவராம சங்கர், விடுதலை வேந்தன் ம.செந்தமிழன், திருக்குறள் அடியான், மோ. ஸ்டாலின், மாதவன் ஆகியோர் புறப்பட்டனர்.

தொடக்க விழாவிற்கு வேதாரணியம் வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. எஸ். சிவசுந்தரம் தலைமையேற்று எழுச்சிமிகு மொழி உரிமை உரையாற்றினார். தமிழ்ச் சான்றோர் பேரவையின் நாகை மாவட்ட தலைவர் கவிஞர் காந்தி நாதன், அரிமா சங்கத் தலைர் கே. பக்கிரிசாமி இடும்பாவனம் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் புலவர் வை. பழநிச்சாமி, புலவர் சி. கனகசபாபதி, கலை இலக்கிய பெருமன்ற பொறுப்பாளர் முத்து, ஆசிரியர் வை. பழநிவேலனார், ஆசிரியர் சரவண முத்து , தோழர் முத்து ராமலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தோழர் பெ. மணியரசன் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

www.padippakam.com



# மொழிப்போர் அழைக்கிறது வருகவே!

- தன்னுரிமை விரும்பி

வருகவே வருகவே வருகவே
தமிழ் மொழியில் கல்விகோரி
தமிழ்ரத்த நாளமெல்லாம்
வருகவே வருகவே வருகவே

ஆற்றுநீரைத் தேக்கிவைத்தே அணைகள் கட்டி வாழ்ந்ததும்
விண்ணணமுட்டும் கோபுரங்கள் மதுரை தஞ்சை கண்டதும்
போற்றலாகும் கட்டடங்கள் மதில்சுவர்கள் வடித்ததும்
புலமைமிகு பழமைமிகு தமிழ்க் கல்வி வலிமையே
வருகவே ... வருகவே

உணர்வுகொண்ட தமிழரெல்லாம் உறுதிகொண்டு வருகவே
ஊனர்நெஞ்சம் நடுநடுங்க உரிமைகேட்டு வருகவே
மனித வாழ்வு மண்ணகத்தில் புனிதமாக வருகவே
மக்கள் வழி தமிழ்க் கல்வி வென்றெடுக்க வருகவே
வருகவே... வருகவே

வீறு கொண்ட தமிழறிஞர் நூறுபேரு போர்முனை
விலைகொடுக்கும் படைக்களத்தில் இளையரத்தம் சேர்வனை
சீறும் பாம்பு சினம்கொண்டு செருக்களத்தைப் படைத்திடு
சாவு கூட ஒருமுறைதான் தமிழ் வாழ உயிர் விடு
வருகவே... வருகவே

விதிபடைக்க அறிவு சார்ந்தோர் வீதிவந்தார் என்பதை
வீடுதோறும் நாடுதோறும் விளங்கவைக்கப் புறப்படு
கொதிகிளம்பும் அனல்நெருப்பாய் கோபமேற்ற முகத்துடன்
கல்வி தோறும் தமிழிருக்கக் களமமைத்துப் புறப்படு
வருகவே... வருகவே

பாழ்பட்ட அயல்நாட்டுக் கல்விமோகம் அகலவே
பகைகக்கும் ஆளும்வர்க்கம் தொடைநடுங்கி ஓடவே
நாள்குறித்து நம்படைகள் அணிவகுத்து வருகவே
நிகழ்கால வீரவாழ்வு புறம்படைக்க வருகவே
வருகவே... வருகவே.

பொழிவு செய்யும் உரைஞரெல்லாம் மொழிக்களத்தில் வருகவே
பாத்தொடுக்கும் கவிஞரெல்லாம் போர் தொடுக்க வருகவே
பழியழித்துப் பகையைவெல்ல பெண்களெல்லாம் வருகவே
பால்குடிக்கும் எம்குழந்தை களமிறங்கி வருகவே
வருகவே... வருகவே

பொன்னி வைகை நதிகள் பாயும் தமிழகத்து மண்ணிலே
புறவாழ்வு காதல் வாழ்வு சொன்னதமிழ் நூல்கள்
இன்று அந்தோ கல்வியெல்லாம் ஆங்கிலத்து மொழியிலே
சிறந்தவீட்டில் நுழைந்த நாய்க்கு விடை கொடுப்போம் வருகவே
வருகவே... வருகவே

படிப்பகம்